விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 25
ஒலி 103 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 18 ஞாயிற்றுக்கிழமை (31.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# நாட்டில் பொருளாதார சீர்திருத்தம் இடம்பெறும்வரை தேர்தல்கள் இல்லை

## ஜனாதிபதியின் திடீர் அறிவிப்பால் அனைவரும் குழப்பம்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பொருளாதார சீர்திருத்தப் பணிகள் நிறைவடையும் வரை தேர்தலை நடத்துவதற்கு வாய்ப்பில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றம் காண சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் பொருளாதார சீர்திருத்தச் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானதென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார், எனவே அந்த வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கி 19

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்

# இன, மத மோதல்கள் தூண்டப்படலாம்

## சம்பிக்க எம்.பி எச்சரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாட்டில் இன, மத மோதல்கள் தூண்டப்படலாம் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பதவிக்காக இன முறுகல் தூண்டப்படும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயார்

### நீதியமைச்சர் விஜயதாஸ

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட தமக்கு பல கோரிக்கைகள் வருவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகா சங்கத்தினர் உட்பட அனைத்து மதத் தலைவர்களும் பல்வேறு தரப் 19

## மரண வீட்டில் கைகலப்பு

### 6 பேர் படுகாயம் புதுக்குடியிருப்பில் சம்பவம்

(முல்லைத்தீவு)


மரண வீடு ஒன்றில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியதில் 6 பேர் 19

## கோழியிறைச்சி ரூ.1000

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி கோழி இறைச்சி மற்றும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள 19

## நானே ஜனாதிபதி வேட்பாளர் ரணிலுடனான சந்திப்பில் பசில்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் நானே வேட்பாளராக முன்நிற்கப்போகின்றேன் என ரணிலுடனான சந்திப்பில் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந்தித்து தேர்தல்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

முதலில் பொதுத் தேர்தலை நடத்து 19

## ஈஸ்டர் இன்று

### நினைவேந்தல்களுக்கும் ஏற்பாடு



19

## தடுப்பூசி செலுத்தப்பட்ட நோயாளி உயிரிழப்பு

### விசாரணைகளை ஆரம்பித்தது சுகாதார அமைச்சு

(கொழும்பு)

ராகம போதனா வைத்திய சாலையில் தடுப்பூசி செலுத்தப்பட்ட நிலையில் நோயாளி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது 19

## பொருளாதாரத் திட்டங்கள் தொடர்பில் இலங்கை - இந்தியா கலந்துரையாடல்

(புது டில்லி)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு பொருளாதார திட்டங்களின் மீளாய்வு தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது

இந்திய வெளியுறவு செயலாளர் தலைமையில் புது டில்லியில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கையின் பொருளாதார நிலை சாதாரண மட்டத்தை எட்டியுள்ளமையினால் இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவாத்ரா இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

(ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட பின்பே முடிவுகள் எடுப்போம்

## சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் யார் வேட்பாளர் என அறிவிக்கப்பட்ட பின்னரே, தமிழரசு கட்சி அது தொடர்பில் கலந்துரையாடி எவ்வாறான முடிவை எடுக்க வேண்டும் என தீர்மானிக்க முடியும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஜனாதிபதி பதவியில் இருப்பவர் மக்கள் ஆணையற்ற ஒருவரே. எனவே, சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

அது மாத்திரம் அன்றி தற்போது, மக்கள் ஆணையில்லாத பாராளுமன்றமே உள்ளது. அதனால் அதனையும் வெகுவிரைவில் கலைத்து, பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.நடத்த வேண்டிய தேர்தல்களைக் கூட நடத்தாமல் இருக்கின்ற இந்த ஜனாதிபதி இனியும் தாமதிக்காது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என தெரிவித்தார்.

அதேவேளை ஜனாதிபதி வேட்பாளராக தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் கேட்டபோது, இலங்கைத் தமிழரசுக் கட்சி இதைப் பற்றி இன்னமும் கலந்துரையாடவில்லை. தேர்தல் அறிவிக்கப்படுகின்ற போது இது சம்பந்தமாகக் கலந்துரையாடி முடிவெடுப்போம்.

முதலில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும். யார், யார் வேட்பாளர்கள் எனத் தெரிய வேண்டும். அதைத் தொடர்ந்து நாங்கள் கலந்துரையாடி முடிவெடுப்போம் என தெரிவித்தார்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் தமிழ்க் கட்சிகளைச் சந்தித்து ஆதரவைக் கோரவுள்ளதாக அறிவித்துள்ளமை தொடர்பில் கேட்டபோது, அடுத்த வாரம் அவர்கள் எம்மைச் சந்திக்கவுள்ளனர்.

அவர்களோடு மட்டுமல்ல ஏனைய பல கட்சிகளுடனும் நிறைய சந்திப்புக்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் என்று வருகின்ற போது அதில் யார், யார் வேட்பாளர்கள் என அறிவிக்கப்படுகின்றபோது நாங்கள் உரிய முடிவைத் தீர்மானிப்போம் என தெரிவித்தார்.

(ம-7,10,33)






அனைத்துலக சுழியக் கழிவு தினமான நேற்று யாழ் நகரில் "யாழ் ஆரோக்கிய பவனி" தூய்மையாக்கல் பணியும் விழிப்புணர்வு செயற்பாடும் இடம்பெற்ற போது.

இந்தியத் துணைத் தூதரகம், யாழ். மாநகரசபை, யாழ். பிரதேச செயலகம், தொல்லியல்த் திணைக்களம் மற்றும் யாழ். பொலிஸார் ஆகியோரின் பங்கேற்பில் சிகரம் நிறுவனத்தின் படலை வடமாகாண சுற்றுலா சேவைப் பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்றது.

# ஆசனவாயில் காற்று நிரப்பி விளையாட்டு

## குடல் வெடித்து ஒருவர் மரணம்

(கொழும்பு)

தென்னிலங்கை தனியார் நிறுவனமொன்றின் பழுதுபார்ப்பு பிரிவில் பணிபுரியும் ஊழியர் ஒருவரின் ஆசனவாயில் விளையாட்டாக காற்று நிரப்பும் இயந்திரக் குழாயை செருகி காற்று நிரப்பியதால், அவர் குடல் வெடித்து உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் குறித்த நிறுவனத்தில் பணியாற்றிய பாணந்துறை அலுபோமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தேஷான் மதுஷங்க என்ற 24 வயதுடைய இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கடந்த திங்கட்கிழமை (25ஆம் திகதி) பிற்பகல், அதே நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு ஊழியர்கள், உயிரிழந்த ஊழியரின் ஆசனவாயில் விளையாட்டாக காற்று நிரப்பும் இயந்திரத்தின் குழாயை பிடித்துள்ளனர்.

இதன்போது, குழாய் செருகுப்பட்டு, உடனடியாக அகற்ற முடியாமல் போனது. அத்துடன், அதிக அழுத்தத்தில் காற்று உட்செலுத்தப்பட்டதால் குடல் வெடித்து ஊழியர் உயிரிழந்தார்.

இந்நிலையில் உயிரிழந்த ஊழியரின் பிரேத பரிசோதனை நேற்று முன்தினம் ராகம வைத்தியசாலையில் நடைபெற்றது. இந்நிலையில் சம்பவம் தொடர்புடைய இரு தொழிலாளர்களை சப்புகஸ்கந்த பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-7,10)

# ரயிலில் மோதுண்டு இருவர் உயிரிழப்பு

(கண்டி)

கண்டி ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த கடுகதி ரயிலில் மோதுண்டு இருவர் உயிரிழந்துள்ளனர்.

றாகம ரயில் கடவை மற்றும் றாகம துடுவேகெதர ஆகிய பகுதிகளுக்கிடையில் நேற்று இந்த சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் றாகம ரயில் கடவை அருகில் ரயிலில் மோதுண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் துடுவேகெதர பகுதியில் வைத்து ரயிலில் மோதி ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ம-7,10)

# திருத்தி வாசிக்குக

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வலம்புரியின் 6 ஆம் பக்கத்தில் வெளியான ஆஸி உயர்ஸ்தானிகர் மன்னார் விஜயம் என்று தலைப்பிடப்பட்ட செய்தியில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பவுல்ஸ்டீபன் என்று திருத்தி வாசிக்கவும்.(ஆ-ர்)

# பொதுக் கூட்டம்

2024ம் ஆண்டுக்கான உரும்பிராய் ஞான வைரவ கோவிலடி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் (நவரத்தினக்குருக்கள் சரஸ்வதியம்மா ஞாபகார்த்த மண்டபம்) இடம்பெறவுள்ளது.

நிலைய தலைவர் இரா. ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வலிகிழக்கு பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் S.இளமுருகன் அவர்களும் உரும்பிராய் தெற்கு கிராம உத்தியோகத்தர், திருமதி நித்தியா சுரேஸ்குமார் அவர்களும் விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(ம-7,10)

**வேலையாட்கள் தேவை**

எமது உணவகத்திற்கு கொத்து போடுபவர், உதவியாளர் தேவை. தங்குமிட வசதி உண்டு. (307)

077 629 0894

**மலிவு விற்பனை**

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-0037)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

**வீடு வாடகைக்கு உண்டு**

சங்கானை பிரதான வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : (313)

077 623 7037

**மெட்டி ஒலி திருமண சேவை**

1989, 1996 கனடா சூரிய செவ்வாய் பெண், ஐரோப்பாவிலுள்ள சூரிய செவ்/ செவ் குற்றமுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. விருப்பத்துக்கு ஏற்ப மணமக்கள் பார்த்து தரப்படும். (310)

0094764752219(only)
077 335 2262
077 889 4353

**விற்பனைக்கு**

ஆறுகால்மடம், பழம் றோட் 2 ஆம் ஒழுங்கை 10 பரப்பு காணி கிணறு, 27 தென்னம் மரங்களுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

Whatsapp (308)

Kumar: 416 258 4288
Ravi : 077 884 7019

**உடன் விற்பனைக்கு**

A- Star கார் விற்பனைக்கு
2012 பதிவு
KP- xxxx
90,000 Km ஓடிய நிலை
விலை - 3,250,000/=
Hp Lap Top(2015) - 25,000/= (304)

076 711 2102
077 542 0783

**வீடு வாடகைக்கு உண்டு**

233/7, கோயில் வீதி, நல்லூரிற்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.

முற்பணம் : 500,000/=
வாடகை : 50,000/=

தொடர்புகளுக்கு : (306)

077 002 2251

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு ஆதரவளிக்க கருணா தீர்மானம்

(மட்டக்களப்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப் போவதாக முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா) தெரிவித்துள்ளார்.மட்டக்களப்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதே வேளை அம்மான் படையணி என்ற புதிய படையணி ஒன்றை தான் உருவாக்கி உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார் கடந்த காலங்களில் அரசியலில் தீவிரமாக இயங்கிய கருணா, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்ததுடன் செயற்பாட்டு ரீதியாக தீவிர அரசியலில் ஈடுபடவில்லை.

மேலும், ராஜபகஷர்களின தீவிர ஆதரவாளனாக கருணா செயற்பட்டு வந்த நிலையில், தற்போது நடைபெறவுள்ள தேர்தல் ரணிலுக்கு தான் ஆதரவு தெரிவிக்கப்போவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அமெரிக்கா ஆதரிக்க வேண்டும்

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கோரிக்கை

(வோஷிங்டன்)

**இலங்கையில் ஐ.நாவின் உண்மை மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ள நிலையில் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அமெரிக்கா ஆதரிக்கவேண்டும் என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கெனிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் தங்கள் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

1.ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து, மற்றும் சர்வதேச சட்டங்களின்படி அவர்களுக்குள்ள உரிமைகளின் அடிப்படையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக வழிமுறையான பொதுவாக்கெடுப்பு முறையை ஆதரியுங்கள்.

2. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் பரிந்துரைகளைப் பின்பற்றி போரின் போது பொதுமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு விரிவான சர்வதேச விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை ஆதரியுங்கள்

3. சுயாதீனமான நீதித்துறை நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், சாத்தியமான குற்றச்சாட்டுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு விசாரணைகளுக்காகப் பரிந்துரைக்கவும் அமெரிக்காவிற்கு ஐக்கிய நாடுகள் சபையில் பொதுச் சபை, பாதுகாப்பு கவுன்சில் மற்றும் மனித உரிமைகள் கவுன்சில் உட்பட உள்ள தலைமைப் பாத்திரத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தவும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# சு.க வின் முக்கிய உறுப்பினர்கள் நீக்கம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க ராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண மற்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவி நிலைகளில் இருந்து நீக்குவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்றது.

அதன்போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (நி-6)

# மரண அறிவித்தல்

மண்ணில் 03 - 05 - 1927



விண்ணில் 28 - 03 - 2024

## அமரர். வல்லிபுரம் சரஸ்வதி

ஆலங்குளம் துணுக்காயை பிறப்பிடமாகவும் ஒலுமடு மாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சரஸ்வதி அவர்கள் 28.03.2024 அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான ஆலங்குளம் விதானையார் வயிரமுத்து-ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும், பளம்பாசியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சபாபதி-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபாபதி வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், மயில்வாகனம், யோகமலர், ஆனந்தராசா, தங்க மலர், இறஞ்சிதமலர், புஸ்பமலர், வசந்தகுமாரி, கதிரமலைநாதன் (இந்திரன்) விமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகராசா, தேவமலர், புஸ்பராணி, அமரர் பாலகிஸ்ணன் (கற்கண்டு), அமரர். இரத்தினசிங்கம், அமிர்தலிங்கம், திருநாவுக்கரசு, சுகந்தினி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 31.03.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் ஒலுமடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


ஒலுமடு, மாங்குளம்.

தகவல்
குடும்பத்தினர்

(சி-0035)

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 11 - 1937



மறைவு 27 - 03 - 2024

## திருமதி.காசிப்பிள்ளை குணபூஷணம்

(விசாலாட்சி சமேத காசி விஸ்வநாத சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா)

சிவன் கோவிலடி, வட்டுமேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. காசிப்பிள்ளை குணபூஷணம் அவர்கள் 27.03.2024 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா கற்பகம் தம்பதியினரின் அன்பு மருமகளும், வைத்தியர் அ.க. காசிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், மைத்திரேயி, சங்கமித்திரா, சுமந்திரன், நளாயினி, வாசுகி, சுலபை ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ் சென்ற சவுந்தரராஜா(உபதபால் அதிபர்), ரவிச்சந்திரன் (வலயக்கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம்), சிவதாரணி, ஞானச்சந்திரன், சர்பநடராஜன் ஆகியோரது அன்பு மாமியாரும், ஜனந்தன், சிவதனுசன், திவ்வியா, அபிநயா, துஷாரா, சிவப்பிரியா, கிருசிகா, அனோஜன், மைதிலி, விசாலினி, சுதநடேஸ், சுவேதினி, ராகுல் ஆகியோரது பாசமிகு பேத்தியும், திஷிகாவின் பூட்டியும், காலஞ் சென்றவர்களான இராசவைத்தியர் அ.க. குமாரசாமி, மாணிக்கம், சிவஞானவதியார், சந்திரசேகரம்பிள்ளை, புஷ்பபாலன் ஆகியோரின் மைத்துனியும், அரியசுவர்ண புவர்ணராணி, சித்திரபூபதி, காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (31.03.2024) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(289)

சிவன்கோவிலடி,
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:-குடும்பத்தினர்
மகன்:- கா.சுமந்திரன்
T.P:- 077 398 0566

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# லக்னோ கலக்கல் வெற்றி

## தவானின் அரைச்சதம் வீண் ● பஞ்சாப் கிங்ஸ் ஏமாற்றம்

பஞ்சாப் அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் அசத்திய லக்னோ அணி 21 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. பஞ்சாப் அணித் தலைவர் ஷிகர் தவானின் அரைச் சதம் வீணானது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது. லக்னோவில் நடந்த லீக் போட்டியில் லக்னோ, பஞ்சாப் அணிகள் மோதின.

லக்னோ வழமையான அணித் தலைவர் ராகுல் "இம்பெக்ட்" வீரராக களமிறங்கினார். இதனையடுத்து அணியை நிக்கோலஸ் பூரன் வழிநடத்தினார்.

**குயின்டன் அபாரம்**

லக்னோ அணிக்கு லோகேஷ் ராகுல் (15), தேவ்தத் படிக்கல் (9) சோபிக்கவில்லை. ராகுல் சகார் வீசிய 9ஆவது ஓவரில் வரிசை யாக 2 சிக்சர் பறக்கவிட்ட மார்கஸ் ஸ்டாய்னிஸ் (19) ஆறுதல் கொடுத்தார்.

பொறுப்பாக விளையாடிய குயின்ரன் டி கொக், ஹர்ஷல் படேல், ரபாடா பந்தில் தலா ஒரு பவுண்டரி அடித்தார். மறுமுனையில் அசத்திய அணித் தலைவர் பூரன், ராகுல் சகார் வீசிய 12வது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி அடிக்க 20 ஓட்டங்கள் கிடைத்தது. ஹர்ஷல் படேல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய குயின்டன் 34 பந்தில் அரைச்சதம் கடந்தார்.

**குர்னால் நம்பிக்கை**

நான்காவது விக்கெட்டுக்கு 47 ரன் சேர்த்த போது அர்ஷ்தீப் சிங் பந்தில் குயின்டன் (54) ஆட்டமிழந்தார். ரபாடா "வேகத்தில்" பூரன் (42) போல்டானார்.

அபாரமாக ஆடிய குர்னால் பாண்ட்யா, ஹர்ஷல் படேல் வீசிய 18வது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்தார். கர்ரான் வீசிய 19வது ஓவரில் ஆயுஷ் படோனி (8), ரவி பிஷ்னோய் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

லக்னோ அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களை எடுத்தது. குர்னால் (43) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**தவான் விளாசல்**

சவாலான இலக்கை விரட்டிய பஞ்சாப் அணிக்கு அணித் தலைவர் ஷிகர் தவான், ஜொனி பேர்ஸ்டோவ் ஜோடி கலக்கல் ஆரம்பம் கொடுத்தது.

நவீன் உல்-ஹக் பந்தில் 2 பவுண்டரி அடித்த பேர்ஸ்டோவ், மோசின் கான் பந்தை சிக்சருக்கு அனுப்பினார். சித்தார்த், மோசின் கான் வீசிய 3, 6வது ஓவரில் தலா 2 பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்தார் தவான். ரவி பிஷ்னோய் பந்தை சிக்ஸருக்கு அனுப்பிய தவான் 30 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். தொடர்ந்து அசத்திய பேர்ஸ்டோவ், குர்னால் பாண்ட்யா பந்தில் வரிசையாக 2 சிக்சர் பறக்கவிட்டார். முதல் விக்கெட்டுக்கு 102 ஓட்டங்கள் சேர்த்த போது மயங்க் யாதவ் பந்தில் பேர்ஸ்டோவ் (42) ஆட்டமிழந்தார்

**மயங்க் "வேகம்"**

மணிக்கு 156 கி.மீ.,வேகத்தில் மிரட்டிய மயங்க் யாதவ் பந்தில் பிரப்சிம்ரன் சிங் (19), ஜிதேஷ் சர்மா (6) சரணடைந்தனர். மோசின் கான் வீசிய 17வது ஓவரில் தவான் (70), சாம் கர்ரான் (0) அடுத்தடுத்து வெளியேற பஞ்சாப்பின் வெற்றி வாய்ப்பு மங்கியது. கடைசி ஓவரில் வெற்றிக்கு 41 ரன் தேவைப்பட்டன. நவீன் உல்-ஹக் பந்துவீசினார். இந்த ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி உட்பட 19 ஓட்டங்கள் மட்டும் கிடைத்தது.

பஞ்சாப் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 178 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. லிவிங்ஸ்டன் (28), ஷசாங்க் சிங் (9) அவுட்டாகாமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மயங்க் தெரிவானார். (ம-7,10)







## 31ஆவது தடவையாக வெற்றி நடைபோடுகிறது கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணம்


# 2ஆவது சுற்றில் ஹாட்லியையிற்ஸ்



மேற்படி தொடரின் 11ஆவது போட்டியும், நடைமுறையில் 10ஆவது போட்டியும் 29.03.2024 வெள்ளிக்கிழமை அன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஹாட்லியையிற்ஸ் அணிக்கும், யூனியன் அணிக்கும் இடையிலான முதல் சுற்று போட்டி கல்லூரி அதிபரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஹாட்லியையிற்ஸ் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

இவ் அணி 30 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 287 ஓட்டங்களை பெற்றது.

சாகித்தியன் -100 (இத்தொடரின் முதலாவது போட்டியில் சாகித்தியன் 100 ஓட்டங்களை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது), மயூரன்-50, சாதுயன்-47, தினேஸன் -21, ராகவன் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் யூனியன்ஸ் அணியைச் சேர்ந்த பவித்திரன் 6 ஓவர்களில் 48 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கினையும், மகிதன் 6 ஓவர்களில் 56 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கினையும், ரகுபதி 6 ஓவர்களில் 56 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்கினையும் சரணீராஜ் 5 ஓவர்களில் 54 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 18.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 97 ஓட்டங்களை பெற்றனர். [illegible] 14, மகீதனன்-17, தேனுஜன் - 28 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் ஹாட்லியையிற்ஸ் அணியை சார்ந்த கிரிதரன் 19 ஓட்டங்களை கொடுத்து 02 இலக்குகளையும், தினேஜன் 5 ஓவர்களில் 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், வரகுணன் 1.1 ஓவர்களில் 04 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஹாட்லியையிற்ஸ் அணி இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம், காமாட்சி, கிறாஸ்கொப்பர்ஸ் போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் 2ஆவது சுற்றில் கலந்து கொள்வார்கள்.

இப்போட்டி 20.04.2024 அன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையின் செய்தி சவால்மிக்கது

## உயிர்ப்பு விழா வாழ்த்துச் செய்தியில் யாழ்.மறைமாவட்ட ஆயர்


கல்லறையின் கதவுகளை உடைத்தெறிந்து உயிர்த்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, சமூகத்தில் நாதியற்று, வாழ வழி தெரியாது அங்கலாய்த்து நிற்போரினதும், தமது மாண்பைப் பாதுகாக்க ஏங்குவோரினதும், ஏழை எளிய மக்களினதும் தேவைகளை நிறைவேற்ற எம் மனங்களைத் திறந்து தனது உயிர்ப்பின் ஒளியால் எம்மையும் எம் மக்களையும் ஒளிபெறச் செய்வாராக என யாழ்.மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார். உயிர்ப்பு ஞாயிறு தின வாழ்த்துச் செய்தியில் அவர் மேற்கொண்ட வாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஆண்டவர் வெறுமனே சாவை வென்றவர் மாத்திரமல்ல அவர் வாழ்வை மீட்டெடுத்தவர். விண்ணக மகிமையை ஆன்மாக்கள் மீண்டும் பெற்றுக்கொள்ள வழிசமைத்தவர். உயிர்ப்பு என்பது பாவ மன்னிப்பைப் பற்றியது மட்டுமல்ல, மாறாக கிறிஸ்துவுடன் இறந்து உயிர்த்தெழும் ஒவ்வொரு மனிதனுடைய ஆன்மாவின் தற்காலிக மற்றும் நிலையான மாட்சியைப் பற்றியது.

நாம் நற்செய்தியில் கவனம் செலுத்தி, இயேசு கற்பித்த படிப்பினைகளையும் அவருடைய முன் மாதிரிகைகளையும் கருத்தில் கொள்ளும்போது, சிலவேளைகளில் சிலுவை கடினமான செய்தியாகவும், உயிர்ப்பு எளிதான செய்தியாகவும் நமக்கு அமையலாம்.


இயேசு தன் வாழ்வாலும் வார்த்தையாலும் தந்த சிலுவையின் செய்தி சவால்மிக்கதாகும். நாம் ஒவ்வொருவரும் தன்னலம் துறந்து தந்தையாம் இறைவனின் திருவுளத்திற்கு எம்மை முழுமையாக சரணாகதியாக்க வேண்டும். எமது சுயநலன்கள், தீமையான சிந்தனைகள், செயற்பாடுகளுக்குள் நாம் இறக்க வேண்டும்.

உயிர்த்த கிறிஸ்துவோடு புதுவாழ்வு பெற்றவர்களாக, புனிதர்களைப் போன்று நாம் கிறிஸ்துவில் வாழ எம்மை நாம் பழக்கிக் கொள்ள வேண்டும்.



2024 ஆம் ஆண்டிற்குரிய உயிர்ப்பு பெருவிழாவை உலகம் முழுவதும் வாழும் கத்தோலிக்க மக்கள் கொண்டாடும் வேளை இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் இந்த பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-6)

# இயேசுவின் உயிர்ப்பை வெற்றுக் கல்லறைகளே சான்றுபகர இயேசு எம்முடன் உயிர் வாழ்கிறார்



இயேசுவின் உயிர்ப்பின் வரலாறு ஒரு தோற்ற வரலாறு அல்ல அது ஒரு பதிவு செய்யப்பட்ட ஒரு வெற்றியின் வரலாறு. நான்கு நற்செய்தி ஏடுகளும் இயேசுவின் வாழ்வையும் பணியையும் இறப்பையும் உயிர்ப்பையும் வெற்றியின் வரலாறாக தெளிவாகப் பதிந்து வைத்திருக்கின்றன.

இறந்து உயிர்த்து அனைத்தையும் வெற்றி கொண்ட இயேசு இன்றும் உயிர்வாழ்கிறார். உலகில் இன்றும் பிரச்சன்னமாய் இருக்கிறார். இயேசுவின் இந்த உயிருள்ள பிரசன்னம் தான் உலக மதங்கள் மத்தியில் கத்தோலிக்க மதத்தை ஓர் உயிர் வாழ்கின்ற மதமாக இனம் காட்டியுள்ளது.

**இயேசுவின் வெற்றுக் கல்லறைக்கு சான்று பகர மூன்று நியாயங்கள்**

முதலாவதாக ஆதிகால கிறிஸ்தவர்களுடைய இயேசு ஜெருசலேமில் உயிர்த்து திருச்சபையை நிறுவுவார் என்ற போதனை. ஆதிகால கிறிஸ்தவர்களுடைய போதனையில் இயேசு ஜெருசலேமில் உயிர்ப்பார் - திருச்சபையின் தலைமைப் பீடத்தை அங்கு நிறுவுவார் என்ற உண்மை தெளிவாக போதிக்கப்பட்டிருக்கிறது. நிறைய இடங்களில் நற்செய்தி ஏடுகளிலும் திருத்தூதர் பவுல் எழுதிய கடிதங்களிலும் இதனைக் காணக் கூடியதாக இருக்கிறது.

நற்செய்தி ஏடுகளில் புனித லூக்காஸ் பின்வருமாறு பதிவு தருகிறார். "பாவ மன்னிப்புப் பெற மனம் மாறுங்கள் என்று ஜெருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவருடைய பெயரால் பறைசாற்றப்பட வேண்டும் என்று எழுதியுள்ளது. இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள்" (லூக்காஸ் 24 : 47)

திருத்தூதர் பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் இயேசுவின் உயிர்ப்பில் உறுதி பெற்றே தாம் கலாத்திய மக்களுக்கு திருமடலை எழுதுவதாக பின்வருமாறு தெரிவிக்கிறார்."கலாத்திய மாநிலத்தில் உள்ள திருச்சபைகளுக்கு எந்தவொரு தனி மனிதராலோ மனித அதிகாரத்தாலோ ஏற்படுத்தப்படாமல் இயேசு கிறிஸ்துவாலும் இறந்த அவரை உயிர்த்தெழச்செய்த தந்தையாம் கடவுளாலும், திருத்தூதனாக ஏற்படுத்தப்பட்ட பவுலாகிய நானும் என்னுடன் இருக்கும் சகோதரர்களும் எழுதுவது" என்றே தம் திருமுகத்தை ஆரம்பிக்கிறார். இது இயேசுவின் உயிர்ப்பில் உறுதிபெற்று எழுதப்படும் எழுத்துக்களாகும்.

இரண்டாவதாக எதிரிகள், யேசுவின் வெற்றுக் கல்லறை உண்மையை மறைக்க முயன்ற சாட்சியம். எதிரிகள் இயேசு வின் உயிர்ப்புப் பற்றியும் அவரின் வெற்றுக் கல்லறை பற்றியும் அறிந்து அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்து அந்த சிந்தனையை முறியடிப்பதற்கு செயற்படுகின்றனர். அவர்கள் இயேசுவின் உடலை சீடர்கள் திருடி விட்டதாக கதை கட்டுகின்றனர். மத்தேயு நற்செய்தியாளர் எதிரிகளின் இந்தத் திட்டம் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்.

"அவர்கள் மூப்பர்களுடன் கூடிக்கலந்து ஆலோசித்து அப்படைவீரருக்கு மிகுதியாய் பணம் கொடுத்து நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இயேசுவின் சீடர் இரவில் வந்து அவரது உடலைத் திருடிச் சென்றுவிட்டனர் எனச் சொல்லு ங்கள்" (மத்தேயு 28 : 12 - 13) என்று திட்டம் தீட்டுகிறார்கள். மூன்றாவதாக கல்லறைக்குச் சென்ற பெண்கள் தாம் கண்ட வெற்றுக் கல்லறை பற்றி வெளியிடும் சாட்சியம். கல்லறைக்குச் சென்ற பெண்களின் சாட்சியம் இங்கு முக்கியமாகிறது. லூக்காஸ் நற்செய்தி ஏடுகளில் கல்லறைக்குச் சென்ற பெண்களின் சாட்சியத்தை இவ்வாறு காணலாம்.

"பேதுரு எழுந்து கல்லறைக்கு ஓடினார். அங்கு அவர் பார்த்த போது உடலைச் சுற்றியிருந்த துணிகளை மட்டுமே கண்டார். நிகழ்ந்ததைக் குறித்து தமக்குள் வியப்புற்றவராக திரும்பிச் சென்றார்" (லூக்காஸ் 24 : 10 – 12) இது பெண்கள் சொன்ன சாட்சியத்தை பேதுரு உறுதியப்படுத்தியதாக அறியவருகின்றது.இவ்வகையில் பார்க்கும் போது இறையியல் வல்லுநர்கள் தெரிவிக்கும் மூன்று சாட்சிகளும் இயேசுவின் உயிர்ப்பை சான்றுப்படுத்துவதற்கு போதுமான ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆதாரங்களாகவே உள்ளன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**உயிர்த்த இயேசுவுடன் எம் அன்றாட வாழ்வு அனுபவங்களில் என்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்போம்**

இயேசுவின் உயிர்ப்பு மனிதர்களைப் பயமுறுத்தும் அனைத்துப் பயங்களையும் தகர்த்தெறிய வேண்டும். மனிதர்களைச் சாவால்ப்படுத்தும் அனைத்து சர்ச்சைகளையும் சண்டைகளையும் வென்று சாதனை படைக்க வேண்டும்.மனித வாழ்வை மகத்தான ஒரு வாழ்வாக்க வேண்டும்.இயேசுவின் ஞாபகத்தை, அவரின் வாழ்வை, அவரின் பணியை, அவரின் பாடுகளை அவரின் இறப்பை, அவரின் உயிர்ப்பை, அன்றாடம் வாழ்ந்து எல்லா மனிதர்களின் எல்லாத் தேடல்களிலும், எல்லாத் தேவைகளிலும் எல்லா நிலைகளிலும் எல்லா நேரங்களிலும் வாழ்ந்து கொண்டும் அறிவித்துக் கொண்டும் இருக்க வேண்டும்.

நீதிக்காகப் போராடுவோர், உண்மைக்காகப் போராடுவோர்.அடக்கு முறைக்காகப் போராடுவோர் என்று ஒட்டுமொத்தமாக முழு மனித விடுதலைக்காக போராடும் அனைவரிலும் இந்த நிகழ்வு நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. இன்று அநியாயம் புரிவோர் அட்டகாசம் செய்வோர் அடக்கு முறைக்கு உட்படுத்துவோர் அனைவரிலும் கூட இந்த இயேசுவின் உயிர்ப்பு நிகழ்வு நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. அவர்களும் இயேசுவில் உயிர்ப்பார்கள் என்ற நம்பிக்கை கொள்ளவே செய்கிறது. போற்றப்படாத தோற்றவர்களின் வரலாறு பதியப்படாத வரலாறு ஒன்று அல்ல. இயேசுவின் உயிர்ப்பின் வெற்றியை வெற்றுக் கல்லறை சான்று பகர்ந்து நிற்கிறது.

அச்சாட்சியத்தின் வழி வரலாறும் இயேசுவின் வாழ்வை , பணியை, பாடுகளை, உயிர்ப்பை தெளிவாக பதிந்து வைத்திருக்கிறது. மனித வரலாற்றில் நீதிக்கான தேடல்களும் சுதந்திரத்திற்கான செயற்பாடுகளும் எப்போதும் எல்லா இடத்திலும் வெற்றி அடைந்ததாக காண முடியாது.

நமது வாழ்க்கையில் நாம் சந்திக்கும் சிலுவைகள் அனைத்தும் முடிவுகள் அல்ல. மாறாக கடவுளுடன் இருக்கையில் அவை அனைத்தும் விண்ணக மகிமையை நோக்கிச் செல்லும் கதவுகள். ஏனெனில் இயேசுவோடு நமது ஒவ்வொரு சிலுவையும் உயிர்ப்பில் முடிவடைகின்றது என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். எமது அன்றாட வாழ்வின் துன்பங்கள். துயரங்கள் வேதனைகளை அனைத்தையும் வென்று உயிர்த்த இயேசு துணை புரிவாராக.

**கலாநிதி ஞுபன் மரியாம்பிள்ளை அடிகள்,**
**பல்கலைக்கழக ஊடக விரிவுரையாளர்.**

# இராசிபலன்

**31.03.2024**
**பங்குனி 18, ஞாயிற்றுக்கிழமை,**
**சஷ்டி பிற்பகல்5.55 மணிவரை**

**கேட்டை முன்னிரவு 7.32 மணிவரை**
**சுபநேரம் -9.11-10.41 மணிவரை**
**இராகுகாலம் -4.41-6.11 மணிவரை**

**உயிர்ப்பு ஞாயிறு**
**சந்திராஷ்டமம்.**
**அச்சுவினி ,பரணி.**
**வளவன்**


மேஷம்

உடல்நலனில் கவனம் எடுக்கும் சூழ்நிலை ஏற்படலாம்,வேலைச் சுமை கூடும், கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.


ரிஷபம்

நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்,பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு.


மிதுனம்

அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகள் கைகூடும்.


கடகம்

நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


சிம்மம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


கன்னி

வழிபாடு முன்னேற்றம் தரும், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.


துலாம்

தொலைபேசி வழித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், பெரிய மனிதர்கள் வீடுதேடி வரலாம், பொது வாழ்வில் புகழ்கூடும், வாக்கு மேன்மையுண்டு.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு.


தனுசு

கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவு ஏற்படலாம்.


மகரம்

பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.


கும்பம்

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், என்றோ நடக்குமென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம்.


மீனம்

விலகிச் சென்றவர்கள் விரும்பிவந்து இணைவர், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**அச்சம் என்பது மனிதர்களை ஒடுக்க ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிடுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்பட்ட பகுதிகளில் அதிகரிக்கும் திருட்டுகள்

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலி வடக்கு பகுதியில் கடந்த 33 வருடங்களாக இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்த தனியாரின் காணிகள் அண்மையில் காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கப்பட்டது.

பெரும்பாலான காணி உரிமையாளர்கள் வெளி பிரதேசங்கள் மற்றும் வெளிநாடுகளில் வசித்து வருவதால் அவர்களால் உடனேயே அக்காணி களுக்குள் குடியமர முடியவில்லை.


அதனை தமக்கு சாதக மாக பயன்படுத்திக் கொண் டுள்ள கொள்ளையர்கள், அந்த காணிகளுக்குள் புகுந்து வீடுகளை உடைத்து இரும்புகள், கதவு நிலைகள் என்ப வற்றை களவாடிச் செல்கின்றனர். இதனைக் கட்டுப்படுத்து வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-33)

# ஊடகதூது மடல் வெளியீடும் இணையத்தள திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஊடக தூது மடலின் இரண்டாவது வெளியீட்டு விழாவும் ஊடகவியல் கற்போம்- தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணைய யூரியூப் தள திறப்பு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கொழும்புத்துறை பீச் றோட், பிலுப் சுவுந்தரம் மீடியா சென்ரர்-பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றிசேச் சென்ரர் 23-25 பெரிய தோட்ட எனும் முகவரியில் உள்ள இடத்தில் இடம் பெறவுள்ளது. (நி-6)

# மயிலிட்டி துறைமுகத்திற்கு விஜயம் செய்த அமைச்சர்



(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இழுவைப் படகுகளால் துறைமுகத்தில் கடற்றொழிலாளர்கள் படகுகளை கரைசேர்ப்பது மற்றும் எரிபொருள் நிரப்புவது போன்ற செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அதற்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரின் பார்வைக்கு கொண்டுவரப்பட்டிருந்த நிலையில் நேற்று மயிலிட்டி இறங்குதுறைப் பகுதிக்கு களவிஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிலைமைகளை ஆராய்ந்துகொண்டார்.

நிலைமைகளை அவதானித்த அமைச்சர் தரித்து நிறுத்தப்பட்ட படகுகளை ஆழமான பகுதியில் நிறுத்தி வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பாக தொழில் மற்றும் எரிபொருள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வருகைதரும் படகுகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் பொறிமுறையை வகுத்து தீர்வுகளைக் காணுமாறும் துறைசார் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். (நி-6-33)


## விற்பனை

யாழ்.வைத்தியசாலை வீதியில் 15 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட கடை காணித்துண்டும், யாழ்.மின்சார நிலைய வீதிக்கு அண்மையில் பழைய தபாலக வீதியில் 4 பரப்பும் 7 குழியும் அமைந்த காணித்துண்டும், யாழ்.வைத்தீஸ்வரா பாடசாலைக்கு அண்மையில் 4 பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும், யாழ்.தட்டாதெரு சந்திக்கு அண்மையில் 5 பரப்பு காணியும், யாழ்.பிறவுண் வீதியில் 5 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

யாழ்.பிரப்பங்குளம் வீதியில் இல.43இல் 1 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. (C-0033)

தொடர்புகளுக்கு
077 723 2535


# இந்தியாவில் தஞ்சமடைந்த இலங்கை அகதிகள்

(மன்னார்)

மன்னாரில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் அகதிகளாக படகில் சென்று நேற்று காலை தனுஷ்கோடி மணல்திட்டிற்கு சென்று இறங்கியவர்களை மீட்ட இந்திய கடற்படையினர் மண்டபம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை செய்ததில் பொருளாதார நெருக்கடி மற்றும் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகமானதால் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பதால் தமிழகம் வந்ததாக தெரிவித்தனர். (நி-6-285)


## கல்யாண மாலை

இடமாற்ற அறிவித்தல்

அன்பான வாடிக்கையாளர்களுக்கு

இலக்கம் 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கிய கல்யாணமாலை அலுவலகம் 04.04.2024 வியாழக்கிழமை முதல் (தற்காலிகமாக) இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பழைய வலம்புரி அலுவலகம்) எனும் முகவரியில் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

இடமாற்றத்தை முன்னிட்டு 03.04.2024 புதன்கிழமை கல்யாணமாலை அலுவலகத்துக்கு விடுமுறை என்பதை அறியத் தருகின்றோம்.





மேலதிக தொடர்புகளுக்கு :
021 720 1005
076 097 3120



## வினோ நகைப்பூங்கா





உங்கள் தங்க நகைகளை டிஜிட்டல் முறையில் துல்லியமாக தரம் பார்த்து தரச்சான்றிதழ் வழங்கப்படும்

(C-0034)

185, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கடந்த 24.11.2023 முதல் 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.




வினோ நகைப்பூங்கா,
இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5394, 021 222 9494, 074 209 9494


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 434
Viber 076 636 3378



# மீட்சிபெறுமா இலங்கை?

**இந்த நாடு சிங்கள பௌத்த நாடு. இங்கு ஆட்சிக்குரியவர்கள் சிங்களவர்களே என்ற மனநிலை கொண்டவர் களினால் எப்படி இந்த நாடு முன்னேறும்?**

ஒரு நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமென றால் அந்நாட்டு மக்களின் அதீத உழைப்பு முக்கியமாக இருக்க வேண்டும்.

இது எம் தாய் நாடு என்ற ஒப்பற்ற எண்ணம் அந்நாட்டு குடிமக்கள் இடத்தே உணர்வுடன் உள்ளூற கலந்திருக்க வேண்டும்.

அப்போதுதான் அந்த நாடு முன்னோக்கிய பாதையில் செல்லத் தொடங்கும்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் அழிவுகள் போல வேறு எந்த அழிவுகளும் இருந்திருக்க வில்லை. அந்த அளவிற்கு அழிவுகளின் உச்சத்தை இரண் டாம் உலக மகா யுத்தம் கொடுத்திருந்தது. இரண் டாம் உலக மகா யுத்தத்தில் சுமார் 8 கோடி பேர் மடிந்து போயினர். இதில் பெரும்பாலானோர் அப் பாவிப் பொதுமக்கள் என்பது தான் மிக முக்கிய மானது.

இந்த எட்டு கோடி இறப்பில் அரைவாசிக்கு மேல் பட்டினிச் சாவுகள் என்பதற்கு பல ஆதாரங் கள் இருக்கின்றன.

உலக வரலாற்றில் மனிதப் படுகொலைகளின் பின்னர் இந்த உலகம் இனி மீட்சி பெறாது என ஆய்வாளர்கள் கருதினர்.

ஆயினும் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலகின் பல நாடுகள் அதி உன்னத வளர்ச்சியை எட்டின. இந்த வளர்ச்சியில் மிக முக்கியமான நாடாக ஜப்பான் திகழ்கிறது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் அணு குண்டு வீசப்பட்ட உலக வரலாற்றை அமெரி க்கா பதிவு செய்தது. இரண்டு அணுகுண்டு களை ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாயி ஆகிய இரு நகரங்களின் மீது வீசியது அமெரிக்கா.

அணுகுண்டின் கொடூரத்தை இன்றுவரை ஹிரோஷிமா, நாகசாயி நகரங்கள் பறை சாற் றிய வண்ணமே இருக்கின்றன. அணு குண்டு தாக்குதலின் பின் ஜப்பானின் கதை அவ்வளவு தான் என கணித்தனர் உலகத் தலைவர்கள்.

ஆனால் அதுதான் நடந்தாகவில்லை. மாறாக எந்த அணுகுண்டை வீசி எம்மை அளிக்க நினைத்தார்களோ அந்த அணு குண்டுக்கு எதிராக உழைப்பு என்ற உன்னத போரில் ஈடுபட்ட ஜப்பானியர்கள் இன்று உலக சந்தை யில் முதல் தர முத்திரையுடன் ஜப்பான் என்ற தமது நாட்டை உயர்த்தி வைத்திருக்கிறார்கள்.

இதை இவ்விடத்தில் நாம் கூறும் போது எமக்கும் ஒரு உத்வேகம் எழும். ஆயினும் அந்த உத்வேகத்திற்கு வடிவம் கொடுப்பதற்கு எம்மிடம் நல்ல தலைவர்கள் இல்லை என்பது தான் வேதனை.

காலம் காலமாக எமக்கு வாய்த்த தலை



**சிறுபான்மை இனத்தின் மத ஸ்தலங் களை ஆக்கிரமிப்பதிலும் அவர்களின் பூர்வீகங்களை கபளீகரம் செய்வதிலும் அவர்கள் வளங்களை சுரண்டுவதிலும் கவனம் செலுத்தினால் இந்த நாடு எப்படி முன்னேறும்?**

வர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் ஒருதலைப் பட்சமாய் நடந்து கொண்டனரே தவிர அவர்களுக்கு நாட்டை முன்னேற்ற வேண்டும் எனும் கொள்கை இருந்திருக் கவில்லை. இதில் இன - மத ரீதியிலான பாகுபாட்டைக் கடைப்பிடிக்க த்லைப்பட் டனர். காலனித்துவ ஆட்சியாளர்களிடம் நாம் இலங்கையர்களாக இருப்போம் என்ற உறுதியுடன் நாட்டின் அதிகாரத்தை பெற்ற வர்களுக்கு இன- மத வன்மம் தலைக்கேற சிறுபான்மை தமிழினத்தின் மீது காட்டு மிராண்டித்தனத்தை பிரயோகித்தது.

அவர்களின் பூர்வீக பூமியை கைய கப்படுத் துவதில் தீவிரம் காட்டியது. அவர்களின் வளங் களை சுரண்டி அதில் திருப்தியை ஏற்படுத்திக் கொண்டது. அவர்களின்வழிபாட்டுத்தலங்களை ஆக்கிரமித்தது மட்டுமன்றி அதை பௌத்த சின்ன மாக்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டது.

இதன் விளைவு நாட்டில் உள்நாட்டுப் போர் தொடங்கியது. தமது இனத்தின் மறுக் கப்பட்ட உரிமைகளை வழங்கும் படி கோரிய இளைஞர் குழுக்களுக்கு பயங்கர வாதப்பட்டம்வழங்கப்பட்ட துடன் அவர் கள் தேடித் தேடி அழிக்கப் பட்டனர்.

இந்த அழிப்பு முள்ளிவாய்க்கால் வரை நடந்தேறியது. பயங்கரவாதம் அழிக்கப்ப டுவதாய் மேற்கொள்ளப்பட்ட போரில் அநியாயமாய் மடிந்து போனது அப்பா விப் பொதுமக்களின் உயிர்களே.

பல்லாயிரக்கணக்கான அப்பாவி உயிர் கள் பறிக்கப்பட்டதை ஏற்றுக் கொள்ளாத பேரினவாத ஆட்சியாளர்கள், இறந்தவர் கள் அனைவரும் பயங்கரவாதிகளே என முழங்காலுக்கும் மொட்டம் தலைக்கும் முடிச்சு போட்டனர்.

தமிழர்களின் வீழ்ச்சியை அவர்கள் அழிக் கப்பட்ட நாளை வெற்றி விழாவாக கொண் டாடி பால் சோறு உண்டு மகிழ்ந் தனர்.

மடிந்து போனவர்கள் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற எண்ணம் எள்ளழவே னும் இல்லாத ஆட்சியாளர்கள் இருக்கும் வரை இந்த நாடு எப்படி முன்னேறும்?

குண்டுமணி முதல்குண்டூசி வரை அனைத் தையும் இறக்குமதி ஊடாக பெற்றுக் கொள்ளலாம் என்ற இறக்குமதிக் கொள் கையை பின்பற்றினால் இந்த நாடு எப்படி முன்னேறும்?

சிறுபான்மை இனத்தின் மத ஸ்தலங் களை ஆக்கிரமிப்பதிலும் அவர்களின் பூர்வீகங்களை கபளீகரம் செய்வதிலும் அவர்கள் வளங்களை சுரண்டுவதிலும் கவனம் செலுத்தினால் இந்த நாடு எப்படி முன்னேறும்?

இந்த நாடு சிங்கள பௌத்த நாடு. இங்கு ஆட்சிக்குரியவர்கள் சிங்களவர் களே என்ற மனநிலை கொண்டவர்களி னால் எப்படி இந்த நாடு முன்னேறும்?

இவ்வாறு பலதரப்பட்ட கேள்விக ளுக்கு பதில் இல்லை என்பதற்குள் இருக் கும் பதவி மோகத்தையும் இன-மத வன் மத்தையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

எப்போது இந்த நாடு அனைத்து இன- மதத்திற்குரியது என்ற எண்ணம் மேலோங் குகிறதோ அப்போதே இந்த நாடு முன் னோக்கிச் செல்லும்.

இல்லையேல்அரசியல்வாதிகளினதும்மத வாதிகளினதும் சதி வலையில் சிக் குண்டு நாடு மிக மோசமான நிலைக்கே செல்லும்.

ஜப்பானியர்களிடம் இருக்கும் உத் வேகம் எம்மிடம் இல்லாது போனது ஏன் என்பதை தெளிவுற புரிந்து கொள்ள வேண்டியது இன- மதவாதிகளின் தார் மீகக் கடமை .

இல்லை நாம் அவ்வாறு சிந்திக்கப் போவதில்லை எமக்குத் தேவை பதவி, மத மோகம் என்று அடம்பிடித்தால் இந்த நாடு கெட்டு குட்டிச்சுவராய் போவதை எவராலும் தடுக்க முடியாது.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

முல்லைத்தீவு சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர். கு.அகிலேந்திரன் அவர்கள் விபத்துச் சம்பவமொன்றில் அகால மரணமடைந்துள்ளார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

மக்கள் பணியைச் சிறப்பாகச் செய்த மருத்துவர் அகிலேந்திரனுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற,அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** சில வர்த்தக நிறுவனங்கள் தங்கட பொருட்களை விற்பனை செய்வதற்காக இளம் பிள்ளைகளை வீடு வீடாக அனுப்புகினம்.

அதுகளும் ஆண், பெண்ணாகச் சேர்ந்து வீடு வீடாகச் சென்று பொருட்களை விற்கின்ற முயற்சியில ஈடுபடுவதோட, தாங்கள் மனேஜ்மெண்ட் ரெயினி எண்டும் இந்தப் பொருட்களை விற்பதால தங்களுக்கு பொயின்ட்ஸ் கிடைப்பதாகவும் கூறுகினம்.

இது தவிர அந்தப் பிள்ளைகள் களைத்துப் போய்; கோயில்கள்,சன சமூக நிலையங்கள் போன்ற இடங்களில இருந்து இளைப்பாறுவதையும் காணமுடிகிறது.

இதில, என்ன சங்கதி எண்டால் ஒரு பெடியனையும் ஒரு பெண் பிள்ளையையும் சேர்த்து பொருட்கள் விற்பனைக்கு அனுப்புகிற வேலைகளும் நடக்குது.

இது எங்கட கலாசாரத்திற்கு மிகவும் பாதகமாக அமையும் என்பதுதான் என்ர கருத்து

**மூப்பர்:-** விதானையார் நீங்கள் இதைச் சொல்லுறியள். அண்மையில கொழும்புத்துறைப் பகுதியில இப்படி விற்பனை செய்த ஒரு பெடியனை சனங்கள் மடக்கிப் பிடிச்சிருக்கினம்.

என்ன சங்கதி எண்டால், பெண்கள் குளிப்பதைப் படம் பிடிக்கிற வியாதி அவரிட்ட இருக்குதாம்.

இப்படித் தான் ஒரு வீட்டிற்குச் சென்ற அந்தப் பையன், அங்க குளியல் சத்தம் கேட்டதும் உடன அவர் தன்ர கையடக்கத் தொலைபேசியில படம் எடுக்க ஆயத்தமாகியிருக்கிறார்.

காலப்பிழைக்குக் குளித்துக் கொண்டு நின்றது ஓர் இளைஞன்.

பொடிப்பயல் படம் எடுக்க முற்பட்டதை அவதானித்த அந்த இளைஞன் குறித்த பெடியன மடக்கிப் பிடித்த போது,

வீடுகளுக்குச் சென்று பொருட்களை விற்பனை செய்யும் போது, அங்க குளிக்கிற பெண்களைப் படம் பிடிக்கிற தகவல் தெரிய வந்திருக்குது. உடன,அவற்ற கையடக்கத் தொலைபேசியைப் பரிசோதித்த போது அப்படியான ஏகப்பட்ட படங்கள் இருப்பது தெரியவந்தத்தாம்.

**கங்காணி:-** மூப்பர் சொல்லத்தான் எனக்கும் ஞாபகம் வருகுது.

அண்மையில மனேச்மன் ரெயினி என்ற பேரில் வீடுகளுக்குச் சென்ற பெண்பிள்ளைகள் மல்லாகத்தில உள்ள ஒரு வீட்டில காசைத் திருடியிருக்கினம்.


**விதானையார்:-** பொதுவில வீடுவீடாகச் சென்று பொருட்கள் விற்கின்ற இந்த மனேச்மன்ட் ரெயினி எண்ட வேலையை உடனடியாக உரிய நிறுவனங்கள் நிறுத்த வேண்டும்.

இப்படியான நிறுவனங்கள் பொயின்ட்ஸ் சிஷ்டத்தை அறிமுகப்படுத்தி ஏழைப் பிள்ளைகளை ஏமாற்றுகினம்.

அதிலும் முகவரியில்லாத கொம்பனிகள் தான் இப்படியான வேலைகளைச் செய்து எல்லாத்தையும் சீரழிக்கினம்.

அதோட அந்தப் பிள்ளைகளுக்கு வழங்குகிற சம்பளமும் மிகச் சொற்பம். அதிலும் குறிப்பாக மலையகப்பிள்ளைகளைத்தான் இந்த வேலைகளுக்குப் பயன்படுத்துகினம்.

கொழும்புத்துறையில பிடிபட்ட பெடியனும் பதுளையைச் சேர்ந்தவர் என்பது விசாரணையில தெரியவந்திருக்குது.



**வீடுகளுக்குச் சென்று பொருள் விற்பதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேணும்**

விதானையார் இவ்வாறு கூறியதும் விறுக்கென எழுந்த வாத்தியார் வைத்திலிங்கம் இப்படியான வியாபார சிஸ்ரங்களை உடனடியாக நிறுத்த வேணும்.

அப்படித் தேவையெண்டால், அந்தந்த நிறுவனங்கள் அந்தந்தப் பிரதேச செயலர்களுடன் தொடர்பு கொண்டு, யார்யார் வீடுகளுக்குச் சென்று விற்பனை செய்யப் போகினம் என்பதைப் பதிவு செய்து, குறித்த பகுதிக் கிராம சேவையாளரின் அனுமதியுடன் தங்கட விற்பனை நடவடிக்கையை மேற்கொள்ள வேணும். இது விடயத்தில எங்கட பிரதேச செயலகங்களும் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிக்க வேணும்.

இதைச் செய்யாமல் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்கிற நடவடிக்கையை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உடனடியாக நிறுத்த வேணும் என வாத்தியார் கூற, அந்தத் தீர்மானத்தை ஆலடி மாநாடு ஒரு மனதாக நிறைவேற்றியது.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அது சரி, வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் குப்பை கொட்டுகிற நாசகாரியம் இன்னமும் தொடர்ந்து கொண்டு தான் இருக்குது.

இதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் என்ன?

**சிறாப்பர்:-** இதுகள் எல்லாம் எங்களுக்குச் சுணக்கெட்டுப் போச்சுது. வீட்டுக் குப்பைகளை வீதிகளில கொட்டுகிற அளவில நாங்கள் மனச்சாட்சி இல்லாத மனிதர்களாகி விட்டம்.


இந்தாப்பாருங்க, எங்கட பிரதேசங்களில நடக்கிற வீதி விபத்துக்கள்.

ஒவ்வொருநாளும் வீதிவிபத்தால ஆட்கள் இறந்து கொண்டே இருக்கினம். இருந்தும் அதுபற்றி யாரேனும் சிந்திக்கினமா? எண்டால் எதுவும் இல்லை. இந்தநிலையில தான் எங்கட நிலைமை இருக்குது.

சிறாப்பர் கனகசபை பெருமூச்சு விட்டவாறு கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரும்புலிங்கம் என அன்பாக அழைக்கப்படும் கிரிக்கட் பயிற் சியாளர் சண்முகலிங்கம் அவர்க ளின் மறைவு குறித்து?







இத்தனை படை பலம் இருந்தும் தமிழக மீனவர்களை எல்லை தாண்ட அனுமதிக்கிறதே இலங்கை அரசு?

மதுவன் மீசாலை

**சில குடும்பத்தை பூனையும் எலியும் போல என்கிறார்களே வியாசரே?**

"வண்டியோட சக்கரங்கள் இரண்டு மட்டும் வேண்டும். அந்த இரண்டில் ஒன்று சிறியதென்றால் எந்த வண்டி ஓடும்..."

"ஓடுகிற வண்டியோட ஒற்றுமையா இரண்டு மாடு ஒன்றை விட்டு ஒன்று பிரிந்தால்என்ன ஆகும்எண்ணிப்பாரு..."

இவ்வாறான தத்துவப் பாடல்கள் உரு வானதே குடும்பம் என்ற கோபுரம் சாய்ந் துவிடக் கூடாது என்ற கோட்பாட்டுக் காகவே.

ஆனால் இன்றைய குடும்பங்கள் ஏதோ திருமணம் செய்துவிட்டோம். பிள்ளை கள் பிறந்துவிட்டார்கள். அவர்களுக் காக அவர்கள் படிப்பிற்காக, அவர்கள் வாழ்வுக்காக என்ற கடைமைக்காக ஓடிக் கொண்டிருக்கிறது.

பிள்ளைகள் வளர்ந்து தமது பாதையில் சென்ற பின்னர்தனித்திருப்பது கணவன்– மனைவி என்ற உன்னத உறவு மாத்திரமே. இதைப் புரிந்து வாழாதவரை அந்த உறவுக்கு ஓர் அர்த்தம் இருக்காது.

சுதன் குப்பிழான்

**இத்தனை படை பலம் இருந்தும் தமிழக மீனவர்களை எல்லை தாண்ட அனுமதிக்கிறதே இலங்கை அரசு?**

தமிழகம் என்பது எமது தொப்புள் கொடி உறவுகள். அந்த உறவில் விரிசலை ஏற் படுத்தப் பார்க்கும் சதி வலையில் நாம் சிக்கு வோமாக இருந்தால் அது தமிழினத் திற்கு நன்மை பயிர்ப்பதாக இருக்காது. பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் இலங்கை அரசின் சூழ்ச்சியை நாம் நன்கு உணர்ந்து அதற்கேற்றாற் போல் நடந்து கொள்வதே புத்திசாலித்தனமா னது.

எதையும் பேசித் தீர்க்கப் பார்த்துக் கொண் டால் நல்லது. இதை விட்டுவிட்டு நாமே நமது உறவில் விரிசலை ஏற்படுத்தப் பாடுபடக்கூடாது.

இந்திய மீனவர்கள் அத்து மீறுகிறார் என்று இந்திய அரசிடம் கூறுவதை விடு த்து இலங்கை அரசின் காதில் கத்தி என்ன பலன் கிடைக்கப் போகிறது கூறுங்கள்.

அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **076 097 3126** என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

ஜெயமோகன் கொக்குவில்

**இரும்புலிங்கம் என அன்பாக அழைக்கப்படும் கிரிக்கட் பயிற் சியாளர் சண்முகலிங்கம் அவர்க ளின் மறைவு குறித்து?**

வடக்கு கிரிக்கெட் பெரும் சொத்தை இழந்துவிட்டது. கிரிக்கெட்டின் மிக உச்ச மானவர் திருவாளர் சண்முகலிங்கம் அவர்கள்.

அவர்களிடம் அடியேன் சிறிது காலம் கிரிக்கெட் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தக் காலம் எனது வாழ்வின் மிகப் பெரும் பொக்கிஷம்.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடை யிலான போட்டியில் முதல் "கற்றிக்" சாதனை அடியேனுடையதே. அந்தச் சாதனையைப் படைக்க மிகப் பெரும் உந்துசக்தியாக இருந்தவர் சண்முக லிங்கம் அவர்கள்.

கடும் பயிற்சி, கடும் ஒழுக்கம், கடும் மனக் கட்டுப்பாடு, கடும் உழைப்பு என கிரிக்கெட்டினூடே எமக்கு வாழ்வைக் கற் றுத் தந்தவர் சண்முகலிங்கம் அவர் கள்.

அவர் ஆரோக்கியமாக வடக்கில் கிரிக் கெட்டில் இயங்கியிருந்தால் இன்று இல ங்கை அணியில் பல யாழ்ப்பாணத்து வீரர்கள் இருந்திருப்பார்கள்.

அவ்வளவு ஆற்றல் கொண்டவர் அவர். அவருக்கு எமது இதய அஞ்சலிகள்.

இளங்கோ மானிப்பாய்

**மேல்குடி- கீழ்குடி எனும் பாகுபாடு இருக்கும் நிலையில் எமக்கு சுயா ட்சி அமைந்தால் எப்படி இருக்கும் வியாசரே?**

பாகுபாடு அவ்வளவு சுலபமாக அகலும் என்று யாரும் நினைத்தால் அது தவறு தான்.

ஆயினும் பாகுபாடு பல மடங்கு மலையேறிவிட்டதென்றே கூற வேண்டும்.

கஞ்சிக்குள் பயறுபோல ஆங்காங்கே சிறிது இருக்கவே செய்கிறது. அதை நாம் பற்றிப் பிடித்து தூக்கிக் காட்டிக் கொண்டிருப்போமாக இருந்தால் பாகுபாடு எப்போதும் வளர்ந்து கொண்டு தான் இருக்கும்.

ஆதலால் நாம் அனைவரும் மனித ஜாதி என்ற நோக்கில் பார்க்கும் சமூக த்தை உருவாக்க பாடுபடவேண்டும்.

இதை விடுத்து இன்றும் அது இருக்கிறது என்று கூச்சல் போட்டால் நாம் வாழ்வில் பின்நோக்கியே செல்ல வேண்டி வரும்.

ராஜேஸ் வதிரி

**இனமென- மதமென பிரிந்தது போதும் என்பது சாத்தியமா வியாசரே?**

இன-மத பாகுபாடு என்பது இற்றைக்கு நான்கு தசாப்தத்திற்கு மேலாக இருக்கவே செய்கிறது.

இலங்கைத் திருநாட்டில் ஏன் போர் வெடி த்தது என்பதற்கான பதிலும் இதுவே.

இதைப் புரிய வேண்டிய ஆட்சியாளர்கள் புரியாததன் விளைவே முள்ளிவாய்க்கால் வரை இரத்த ஆறு ஓடக் காரணமாக இருந்தது.

இலங்கை ஒரு இனத்திற்கு-மதத்திற்கு சொந்த மானது என்ற எண்ணத்தை விதை த்து, அதனூடே வன்மத்தைத் தோற்று வித்து, அந்த வன்மத்தை சிறுபான்மை இனத்தின்மீது கட்டவிழ்த்து விட் டார்கள் பேரினவாத ஆட்சியாளர்கள்.

அதுவே இன்றுவரை இலங்கை எனும் அழ கிய நாடு சீரழியக் காரணமாயிருக்கிறது. ஆனால் இதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவே இல்லை.

துஜீபன் கொடிகாமம்

**வெடுக்குநாறிக்கு வராதவர்களை விமானக் கண்காட்சியில் கண்டோமே?**

வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலய வளா கத்தில் வாழைக்காய் பச்சி, மிளாய் பச்சி, கரம் சுண்டல், குறைந்த விலையில் ஐஸ்கிறீம் என்பன கிடைத்திருந்தால் அங்கேயும் வந்து இருப்பார்கள். ஆனால் அங்கு தான் அப்படி எவையும் இருக்க வில்லையே. பிறகு எப்படி அங்கு ஆர்வமாக வர முடியும் சொல்லுங்கள்.

இங்கு எங்கள் தலை மீது குண்டு போட்டு எங்களை அழித்த விமானங்கள் காட்சிப் படுத்தப்பட்டன. அவை எவ்வாறு எங்களை அழி த்தன என்று விளக்க உரை நடந்து கொண்டே இருந்தது.

அதைப் பார்க்கவும் கேட்கவும் ஆர்வமாக இருந் தது. அதனால் அங்கு கொடி விட்டு பறந்து சென் றார்கள், பார்வையிட்டார்கள். இதில் என்ன பிரச் சினை தம்பி துஜீபன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கா லத்தால் அழியாத ஙாங்கள்

படம்: சங்கமம்
இசை: A.R. ரஹ்மான்
பாடியவர்: நித்தியஸ்ரீ



சௌக்கியமா கண்ணே சௌக்கியமா
சௌக்கியமா கண்ணே சௌக்கியமா
சௌக்கியமா சௌக்கியமா சௌக்கியமா

தனதோம் த தீம்த தனதோம் த தீம்த
தனதன தோம் தனத்தோம்
திகுதிகு தனதன தோம் தனத்தோம்
தகு திகு தனதன தோம் தனத்தோம்

விழிகளில் நடனமிட்டாய் பின்பு
இதயத்தில் இறங்கிவிட்டாய்
மெல்ல மெல்ல என்னுயிரைப் பறித்துக்கொண்டாய்
மனதை தருவும் ஒரு அம்பானாய்
மனதை தருவும் ஒரு அம்பானாய்

பருவம் கொட்டிவிட்டு பறவை ஆனாய்
பருவம் கொட்டிவிட்டு பறவை ஆனாய்
ஜனுத தீம் ஜனுத தீம் ஜனுத தீம்
சலங்கையும் ஏங்குதே
அது கிடக்கட்டும் நீ

சௌக்கியமா கண்ணே சௌக்கியமா
சௌக்கியமா கண்ணே சௌக்கியமா
சௌக்கியமா சௌக்கியமா சௌக்கியமா

சூரியன் வந்து வாவெனும் போது
சூரியன் வந்து வாவெனும் போது
சூரியன் வந்து வாவெனும் போது
என்ன செய்யும் இந்த பனியின் துளி
என்ன செய்யும் இந்த பனியின் துளி

கோடிக் கையில் என்னைக் கொல்லையிடு
கோடி கையில் என்னை அள்ளி எடு
கோடி கையில் என்னை கொல்லையிடு
கோடி கையில் என்னை அள்ளி எடு

அன்பு நாதனே நீ அணிந்த மோதிரம்
வளையலாகவே துறும்பென இளைத்தேன்
அந்த மோதிரம் ஒட்டியாணமாய்
ஆகுமென அன்பே அழைத்தேன்

என் காற்றில் சுவாசம் இல்லை
என் காற்றில் சுவாசம் இல்லை
என் காற்றில் சுவாசம் இல்லை
என் காற்றில் சுவாசம் இல்லை
அது கிடக்கட்டும் விடு
உனக்கென ஆச்சு

சௌக்கியமா கண்ணே சௌக்கியமா
சௌக்கியமா கண்ணே சௌக்கியமா
சௌக்கியமா சௌக்கியமா சௌக்கியமா

# அதிகரிக்கும் போதைப் பாவனை


**“போதைப் பொருட்களை விற்பனை செய்பவன் மாத்திரம் அல்ல, தயாரிப்பவன், போதைப் பொருட்களை உபயோகிப்பவன், எடுத்துச் செல் பவன், யாருக்கு எடுத்துச் செல்லப்படுகிறதோ அவன், விற்பவன், வாங்குபவன் இப்படி அனை வரையுமே தண்டிக்கப்பட்டால் மாத்திரமே ஏதா வது ஒரு மாற்றம் வரும். அதை விடுத்து பாவிப் பவனை மாத்திரம் கைது செய்வதால் தயாரிப் பவன் தயாரித்துக் கொண்டுதான் இருப்பான். அவனுக்கு ஒருத்தன் இல்லை என்றால் புதிதாக இன்னொரு நபர் இது தொடர்ந்து கொண்டே தான் இருக்கும்.”**

எது போதை! நல்ல புத்தகங்களை வாசிப் பதா? நற்செயலை செய்வதா? படிப்பில் உயர் வதா? நல்லசம்பளமா? நல்ல வேலைவாய் ப்பா? சமூகத்தில் நற்பெயரா? கிடையவே கிடையாது இப்போதெல்லாம் போதை என்பது உடலை வருத்தி பத்து நிமிடங்கள் தாக் குப்பிடிக்கும் கஞ்சா, கொக்கெயின், ஹெரோயின், அபின், புகையிலை, மது இதெல்லாம் தான் போதை ஆகிவிட்டது. மது, சிகரெட் ஆகியவை முதலில் வழிவகுத்துபிறகுஅதையும் தாண்டி மனிதனை அழிக்கும் போதைப்பொருட்கள் வந்துவிட்டன.

நாட்டில் நடக்கும் பெரிய பெரிய குற்றச் செயல்களுக்கெல்லாம் காரணம் என்ன என் பதை ஆராய்ந்து பார்த்தால் நிச்சயம் பின்புலமாக இருப்பது இந்த போதைப் பொருள் தான். சமீபகாலமாக அதிகம் பேசப்பட்டுவந்த இந்தியா வில் புதுக்குடியிருப்பு சிறுமி துஷ்பிரயோ கத்திற்கு காரணமான 19 வயதுடையவனும் போதைப்பொருள் பாவனையாளன் தான். 54 வயது உடையவனும் போதைப் பொருளுக்கு அடிமையானவன் தான். வயது வேறுபாடின்றி அனைவரையும் ஆட்டிப்படைக்கின்றது இந்த போதைப் பொருட்கள். உலகம் முழுவதும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரைசுமார் 30 கோடிக்கும் மேற்பட்டோர் போதைப்பொருட் களுக்குஅடிமையாக இருக்கின்றனர் என்பது புள்ளி விபரங்களில் தெரிவிக்கின்றது.

இலங்கையில் சட்ட விரோதமான போதைப் பொருட்கள் என்பது மிக முக்கியமான பிரச்சி னையாக பார்க்கப்படுகின்றது. இவ்வாறு இளை ஞர்கள் முதல் பெரியவர்கள் வரை அடிமை யாகின்ற தன்மையை அவதானிக்க கூடியதாக உள்ளது. குடும்பத் தலைவன் போதைப் பொருட் களுக்கு அடிமையானால் குடும்பத்தில் உள்ள ஏனைய அங்கத்தவர்களும் அதனால் பாதிக் கப்பட்டு சமூக சீரழிவுக்கு உள்ளாக்கப்படு கின்றார்கள்.

போதைப் பொருட்களுக்கு அடிமையானால் அவருடைய நிலையும் அவருடைய குடும்பத் தினரின் நிலையும் என்ன ஆகும் என்பதை அவர்கள் அறிவதே இல்லை. அநேகமான குடும்பங்கள் இன்றைக்கு இலங்கை சீரழிந்து




போவதற்கு முக்கிய காரணமாக இருப்பது சட்ட விரோதமான போதைப் பொருட்கள். உலக ளாவிய ரீதியில் சட்டவிரோதமான போதைப் பொருட்கள் பாவனையானது அதிகமாகக் காணப்படுவதுடன் அவைதொடர்பான விடயங் களைப் பார்க்கின்ற போது அதாவது உலகில் பொதுவாக உட்கொள்ளும் போதைப் பொருட் களில் மதுவும் அடங்கும். ஐக்கிய நாடுகள் சபை 2022 உலக அறிக்கையின் படி உலகில் 154 நாடுகளில் மற்றும் பிரதேசங்களில் கஞ்சா பயிரிடப்படுகின்றது.அபின் 57 நாடுகளில் அதிகளவில் பயிரிடப்படுகின்றது. மருந்து, போதைப் பொருட்களை பயன்படுத்தும் முதல் 10 நாடுகளை பார்க்கின்றபோது அமெரிக்கா 6.7%, எஸ்டோனியா 5.0%, பெலாரஸ் 4.1%, மொங் கோலியா 4%, கனடா 3.9%, கிறீன்லாந்து 3.9%, ரஷ்யா 3.8%, கசகஸ்தான் 3.7%, ஐக்கிய அரபு நாடுகள் 3.7%, டென்மார்க் 3.6% என்ற அடிப்படையில் காணப்படுகின்றது. அமெரிக்கா ஏனைய நாட்டையும் விட அதிகமாக சட்ட விரோத மான போதைப் பொருட்களை பயன்படுத்துகின் றது. இவ்வாறு உலகளாவிய ரீதியில் சட்ட விரோ தமான போதைப் பொருட்கள் காணப்படுகின்றது.

அதே சமயம் இலங்கையில் கசிப்பு உள்ளிட்ட சட்ட விரோதமான போதைப் பொருட்கள் காணப் படுகின்றது. இவ்வாறு போதைப் பொருட்களைப் பாவிப்பவர்கள் அதிகளவில் புறமொதுக்கப்படு வதுடன் அதனால் சமூக ரீதியில் விலகல் நடத்தையாளர்களாக முத்திரை குத்தப்பட்டு உளவியல் ரீதியானபல இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள்.

இலங்கையில் இன்று பாடசாலை மாண வர்கள் மத்தியில் பெரிய ஒரு பிரச்சினையாக அமைவது போதைப் பொருட்களே. மாணவர்க ளுக்கு கிடைக்கும் அளவிற்கு இலகுவான முறை யில் வியாபாரம் செய்யப்படுகின்றது என்பது கவலைக்குரிய விடயமே. “மாணவர்களை சரியாக வழி நடத்தவில்லையா, வழி நடத்து பவர்களையும் வழி தவறிவிட்டார்களா என்பது கேள்விக் குறி” பாடசாலைகள், பேருந்து நிலை யங்கள், பொது இடங்களைக் குறி வைத்து போதைப் பொருட்களின் இரகசிய விற்பனை பரவலாகிவிட்டது. பெற்றோர் பாடசாலைக்கு நம்பி அனுப்பதயங்கும் நிலைமை வந்து விட்டது. “எதிர்கால தலைவர்களை உருவாக்குவதற்கு முதற்படியான பாடசாலையிலேயே இவ்வாறான நிலையெனில் அடுத்த கட்டம் எப்படி சிறப்பாக அமையமுடியும்.”

இந் நிலைமைக்கு யார் காரணம். யாரையும் காரணம் காட்டி விட முடியாது. தத்தமது நிலை மைக்கு நானே பொறுப்புதாரியாக இருக்க வேண்டும். **“உண்மையான போதை நமது எதிர்காலமே என்பதை உணரும் போது காலம் கடந்துவிடும்.”**

**மரியசெல்வம் ஜோய் எந்தனி,**
**ஊடகக்கற்கைகள் துறை மாணவி,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுறுப்பு திருட்டில் இஸ்ரேல்!



**“1996 - 2002 காலகட்டத்தில் பாலஸ்தீனர்க ளின் உடல்களிலிருந்து உறுப்புகள் எடுக்கப் பட்டன. இஸ்ரேல் பல்கலைக்கழக மருத்துவ ஆராய்ச்சிக்கும் இஸ்ரேல் நோயாளிகளுக்கு உடலுறுப்பு மாற்றம் செய்யவும் அந்த உடலு றுப்புகள் பயன்படுத்தப்பட்டன.”**

உலக அரங்கில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஐந்து மாதங்களைக் கடந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், போரைப் பயன்படுத்தி உடலுறுப்பு திருட்டில் இஸ்ரேல் ஈடுபடுவதாக அதிர்ச்சித் தகவல்களும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன!

இஸ்ரேல் இராணுவத்தால் கொல்லப்பட்ட பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 30,000 ஐ கடந்திருக்கும் நிலையில், பல உடல்களிலிருந்து முக்கியமான உறுப்புகள் திருடப்பட்டிருப்பதும் தெரிய வந்திருக்கிறது. இது குறித்து காசா தரப்பில், உடல்களைப் பரிசோதித்த பிறகு இறந்தவர்களின் உடலில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது தெளிவாகி யிருக்கிறது. இஸ்ரேலிய துருப்புகள் உடலுறுப்புகளைச் சட்டவிரோதமாக அகற்றியிருப்பதும் உறுதியாகியிருக்கிறது எனத் தெரிவித் திருக்கின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் வகையில் `Euro-Med Human Rights Monitor' என்ற தன்னார்வ அமைப்பு கல்லீரல், சிறுநீரகங்கள், இதயம் உள்ளிட்ட முக்கியமான உடலுறுப்புகள் திருடப்பட்டிருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. கல்லறையிலிருந்து உடல்களைத் தோண்டி எடுத்தும் இந்த உடலுறுப்பு திருட்டில் இஸ்ரேல் ஈடுபட்டிருக்கிறது என்று குறிப்பிடுகிறது.

இஸ்ரேல் மீது உடலுறுப்பு திருட்டுக் குற்றச்சாட்டுகள் எழுவது இது முதன் முறையல்ல. இஸ்ரேலைச் சேர்ந்த மருத்துவரான மெய்ரா வீய்ஸ் 2002 ஆம் ஆண்டு எழுதிய தனது புத்தகத்தில், 1996 - 2002 காலகட்டத்தில் பாலஸ்தீனர்களின் உடல்களிலிருந்து உறுப்புகள் எடுக்கப்பட்டன. இஸ்ரேல் பல்கலைக்கழக மருத்துவ ஆராய்ச்சிக்கும் இஸ்ரேல் நோயாளிகளுக்கு உடலுறுப்பு மாற்றம் செய்யவும் அந்த உடலுறுப்புகள் பயன்ப டுத்தப்பட்டன என்று பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

அதேபோல, 2014 ஆம் ஆண்டு இஸ்ரேல் தனியார் தொலைக்காட்சி வெளியிட்ட புலனாய்வுச் செய்தியில் இஸ்ரேல் இராணுவ வீரர்களின் தீக்காயங்களுக்குச் சிகிச்சையளிக்க, பாலஸ்தீனர்களின் உடலிலிருந்து தோல் எடுக்கப்பட்டது என உயரதிகாரிகள் ஒப்புக்கொண்ட வாக்கு மூலங்களும் இணைக்கப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டு சுவீடனைச் சேர்ந்த அஃப்டான்பிளேடெட்' (Aftonbladet) நாளிதழும் இதே குற்றச்சாட்டை முன்வைத்துக் கட்டுரை வெளியிட்டிருந்தது.

அமெரிக்காவின் சிஎன்என் தொலைக்காட்சி நடத்திய விசாரணையிலும் உலகளாவிய உடலுறுப்பு திருட்டு வர்த்தகத்தின் மிகப்பெரிய மையமாக விளங்குகிறது இஸ்ரேல் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இறந்தவர்களின் கண்ணியத்தை போரிடுபவர்கள் மதிக்க வேண்டும் என 1949ஆம் ஆண்டு போடப்பட்ட ஜெனீவா உடன்படிக்கையை இஸ்ரேல் அங்கீகரிக்கவில்லை. இறந்தவர்களின் உடல்களை மதித்துப் பாதுகாக்க வேண்டும் என்ற சர்வதேசச் சட்டத்துக்கு இஸ்ரேல் கட்டுப்பட வேண்டும்" என்று சமூக ஆர்வலர்கள் குரல் கொடுத்துவருகின்றனர்.

ஏற்கெனவே, காசாவில் இனப்படுகொலையில் ஈடுபடுகிறது இஸ்ரேல் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் நிலையில், “உடலுறுப்புகளுக்காகவும் அப்பாவி பாலஸ்தீன மக்களை இஸ்ரேல் கொன்று குவிக்கிறதா?” என்ற சந்தேகமும் எழுந்திருக்கிறது.

இத்தனை ஆண்டுகளாக இஸ்ரேல் மீது வைக்கப்பட்டுவரும் உடலுறுப்பு திருட்டுக் குற்றச்சாட்டை கண்டுகொள்ளாமலிருக்கும் உலக நாடுகள் இனியும் கண்ணை மூடிக்கொண்டிருப்பது நியாயமல்ல.

தெருக்கள் முழுவதும் ஒரேஞ் பழங்கள் காய்த்துக் கிடக்கின்றன. ஆனால் அங்கு ஓடி விளையாடும் குழந் தைகளோ, சைக்கிளில் செல்பவர்களோ, சாலைகளில் செல்லும் பெண்களோ, வயதான பெரியவர்களோ யாரும் ஒரேஞ் பழங்களை பறிப்பதில்லை. கீழே விழுந்து கிடக்கும் பழங் களையும் எடுப்பதில்லை. இது நடப்பது இந்தியாவில் அல்ல... ஸ்பெயினில் உள்ள செவீல் என்ற குட்டி நாட்டில்.

இந்தப் பழங்கள் குறித்தும், மக்கள் ஏன் இந்த பழங்களை தொடுவதில்லை என்பதை பற்றியும் விளக்குகிறார் அறிவியல் விஞ்ஞானி மற்றும் பேராசிரியர் பிரேம்குமார்.

செவீல் நகரம் நமது சென்னையை விட மூன்று மடங்கு சிறிய நகரமாகும். இந்த நகரத்தில் எங்கு பார்த்தாலும் ஒரேஞ் மரங்கள் நிறைந்திருக்கும். இந்த மரத்தில் டிசெம்பர் மாதம் பாதியிலிருந்து பழம் வரத் தொடங்கி பெப்ரவரி மாதம் பாதி வரை தொடர்கின்றது. இந்த நேரத்தில் செவீல் தெருவெங்கும் ஒரேஞ் பழங்கள் சிதறிக்கிடக்கின்றன.

சாலையில் சிதறிக்கிடக்கும் இந்தப் பழங்களை யாருமே தொடு வதில்லை. மாறாக மக்கள் அந்த மரத்தை சுற்றிக் கட்டப்பட்டிருக்கிற சதுர வடிவிலான அமைப்பிலேயே தள்ளி விட்டுச் செல்கின்றனர்.

இதற்கு காரணம் என்ன என்று கேட்டால். இந்த பழம் மிகவும் கசக்குமாம். மேலும் இதில் துவர்ப்பு மற்றும் புளிப்பு சுவை வேறு இருக்குமாம். அதனால் இந்த பழங்களை அந்நகர தூய்மைப் பணியாளர்கள் மொத்தமாக அள்ளிச்சென்று லண்டனுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

லண்டனுக்கா? லண்டனில் என்ன செய்வார்கள் என்ற கேள்வி எழுவது இயற்கைதான். லண்டனில் இந்த பழத்தை உணவு தொழில்நுட்பம் மூலம் கசப்பை மாற்றி ஒரேஞ் சாதம், ஜாம், மெர்மலேட் ஆகியவற்றை தயாரித்து உண்பார்களாம். என்னதான் இந்த மரம் கிழக்கு ஆபிரிக்காவில் தோன்றி ஸ்பெயின், இத்தாலி, அமெரிக்கா போன்ற பகுதிகளில் பரவி இருந்தாலும், செவீல் ஒரேஞ்சுக்கு என்று உலகம் முழுவதும் ஒரு தனி மவுசு இருந்து வருகிறது.

செவீல் முழுவதும் கிட்டத்தட்ட 47,000 மரங்கள் இருக் கின்றன. இந்த மரங்களிலிருந்து 3,000 தொன் பழங்கள் கிடைக்கின்றன. இந்த பழங்களை ஏற்றுமதி செய்து கிடைக்கும் பணத்தில் அந்நாட்டு அரசு விவசாய நலன், கல்விக்கூடங்கள், மருத்துவம், செவீல் பழம் சார்ந்த ஆராய்ச்சி, சுற்றுப்புறச்சூழல் ஆகியவற்றிருக்கு செலவிடுகின்றது. ஆனால் ஏற்றுமதி மூலம் எவ்வளவு தொகை கிடைக்கின்றது என்பதை செவீல் நாட்டு அரசு ரகசியமாக வைத்துள்ளது.

செவீல் மரங்கள் பெப்ரவரி மாதம் தொடங்கி மார்ச் மாதம் வரை நன்றாகப்பூத்து குலுங்கும். இதன் மணம் மிகவும் அருமையாக இருக்கும். இது சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க சுற்றுலா மூலமும் செவீல் நாட்டு அரசு வருமானம் ஈட்டி வருகிறது.

இதுமட்டுமல்லாமல் செவீல் ஒரேஞ் பழங்களில் தோலில் மருத்துவ குணம் உள்ளது. இதன் தோலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் Cellulitis என்ற மனிதர்களின் தோல் நோய்க்கு நல்ல மருந்தாகவும் இருக்கிறது என்றார்.

## தெருவில் காய்த்து தொங்கும் ஒரேஞ் பழங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## உத்தமன் மீண்டும் உயிர்பெற்ற தினமின்று

கொற்றவன் பிலாத்து மற்றவன் சொல்லை
ஏற்றதனால் அன்று- குற்றம்
அற்றவர் இயேசுவை குருசினில் கொல்ல
வகைசெய்தான் அன்று
உற்றவர் யாரும் அற்றவர் போல் கல்
அறையில் உறங்கி மூன்று
முற்றற நாள்கழிந்து நற்றுயிர் மீண்டும்
பெற்றதினம் இன்று

கூற்றுவர் யாவரும் கூக்குரலிட்டனர்
குருசினில் அறையுமென்று- அதை
ஏற்ற மன்னனும் இயேசுவை சிலுவையில்
ஏற்றியே கொன்று- உயிர்
அற்ற உடல்தனிக் கல்லறையில் இட்டு
விடிந்திட நாள் மூன்று
பொற்பதன் இயேசுவின் பொன்னுடல் மீண்டும்
உயிர் பெற்ற தினமின்று

வீரர்கள் இயேசுவை கைது செய்து
வெற்றிக் களிப்பில் நின்று-பெரும்
கோர நாடகம் ஆடியே சிலுவையில்
ஆணியால் அறைந்துகொன்று
யாரொருவர் வையா கல்லறையில் வைத்து
நகர்ந்திட நாள் மூன்று- உடல்
பேரெழில் பூக்க பெருமான் மீண்டும்
உயிர்பெற்ற தினமின்று

டே.த.எட்வின், உடுவில்.

## வாழத் துணிவு கொள்

புதிய வாழ்வு வாழ எண்ணும் அரிய வாழ்வு காண வா- இன்பம்
செழிக்க எண்ணி வாழ எண்ணும் வழிகள் காண வேண்டுமே- இங்கு
மனிதம் என்றும் மகிழ்ந்து வாழ வழிகள் இல்லையா?- உன்
எண்ணம் போலச் சிறந்து வாழ வழிகள் காண எண்ணி வா

இழிவு கண்டு விலகி ஓடும் வாழ்வு தேவையா?- என்றும்
அரியதான வாழ்வு வாழ வழிகள் காணுவோம்- பொது
நீதி பேணி வாழ்வதற்கு வழிகள் உண்டு காண்- நீ
மனிதனாக வாழ என்றும் வாழ்வை அமைக்க வேண்டும்

அகிம்சை வாழ்வை வென்ற நாடு அமைதி கண்டதா?- வாழ்வு
இளமை வேகம் கண்டு வாழ எண்ணி வாழ்வதால்- என்றும்
இனிமை இனிது என்று வாழ ஏங்கும் மனிதனே- உன்
அறிவு தன்னை நிலைக்க எண்ணி வாழத் துணிவு கொள்

வளவை வளவன்

# மௌனத்தின் தேடல்-709



## என் தம்பி வாழ!

சுதி இழந்து களைத்துவிட்டான்
பசி இருந்து பரிதவித்தான்
பரட்டைமுடிப் பாவியானான்
அன்பு அணையாக் குலக்கொழுந்து
என் உயிர் என்கைகளில் தழுவ
விடமாட்டேன் "அம்மா" என் வாக்கு
மதி இழந்த அரசியல் வேந்தர்க்கும்
விதிவழிந்த அமைச்ச மணிகளுக்கும்
நடுக்கடலில் நட்சத்திரச்சாப்பாடு
நடனத்துடன் தான் ஏற்பாடாம்
பரிதவித்த மக்கள் இறுதிவரை எதிரிகளாய்
என்று வரும் காலம் என் தம்பி வாழ!

சிவ.சுபத்திரன், இணுவை.

## உள்ளம் கவர்ந்த கள்வன்

என்மன வானில் ஓர் ஒளி நட்சத்திரம்
அவர் எண்ணம் எல்லாம் என்மீதே திண்ணம்
கன்னக்குழி அழகாலே என் நெஞ்சுக்குழியில்
நிறைந்தவனே
கண்ணினை இமை காப்பது போல் காப்பாய்
கண்மணியே என்று என்னை அழைப்பாய்
காதிற்கு இனிமை தரும் உந்தன் பாட்டு
மாலை முழுதும் நல்ல விளையாட்டு
கதைகள் பற்பல சொல்வாய்
பள்ளி கொண்டு செல்கையிலும் பாடம்
கற்கையிலும் உற்ற துணையாய்
என் உள்ளம் கவர்ந்த கள்வன் நீ அல்லவா.

இ.பவாநியான், உடுப்பிட்டி.

## அண்ணனின் பாசம்

எல்லோருக்கும் அவரவர் கவலை
எங்களை யாரும் திரும்பியும் பாரார்
கூட்டத்தில் கையை நீட்டிவிட்டானே
கொடுக்காது விட்டால் கௌரவம் போச்சு
செத்துக்கிடந்த மனிதம் தந்த காசில்
பால்வாங்கி தங்கைக்கு பருக்கி விட்டு
தன் மடியை அணையாக்கி தங்கையை
தூங்க வைப்பது அண்ணனின் பாசம்

பிரமன், கொக்குவில்.

## எனது ஆதங்கம்

இடைத் தங்கல் முகாம்
இந்த வாகனப் பெட்டி
அடுத்த வேளை உணவு
தம்பிக்கு ஒரு உடுப்பு
அதுதான் எனது ஆதங்கம்

பி.மதுஷ்சன், தையிட்டி.

## (ஏ) மாற்றம்

போரின் பாதிப்புக்கள்
போகுவில்லை யின்றும்
முறிந்து சரிந்த மரத்திற்கு
முண்டு கொடுக்கும் செயலே
இன்றும் நடைபெறுகின்றது
இருப்பை நிலை நிறுத்த
இரு முக்கிய தேர்தல்களில்
முதலில் எதை நடத்துவதென்பது
இன்று தலையாய பிரச்சினை
எண்ணங்களில் மாற்றம்
திண்ணமாய் மாறாவிட்டால்
என்ன செய்தாலும் கூட
நன்மையை வாரித் தராது.

க.நாகராசா, நுணாவில்.

## அண்ணனின் கையில்

பத்துமாதம் சுமந்த தாய்
பத்திரமாய் பிள்ளையை வளர்க்க
மறந்து விட்டாளோ...
எத்தனையோ சுமைகளைக் கடந்து
ஏனோ அண்ணனின் கையில்?
தத்தித்தவழும் இந்த பால்பிஞ்சு
பூத்துக் குலுங்கும்
காலம் எப்போதோ...

ஆ.லக்ஷ்மி
வவுனியா.

## அனல்கொண்ட பார்வை

அப்பனையும் அம்மையையும் இழந்து கல்வியில்லை
– இல்லிடம் இல்லை
இறுதியில் உன் அன்புத் தம்பிதான் மீதியா?
உன் கண்களிலே அனல் பறக்கும் கோபமடா தம்பி!
எழுந்துவா– இக்கதிநேரக் காரணம் யாரோ உன்
பார்வையின் அனல் சுட்டெரிக்கட்டும்
நீயோ உன்னையும்
தம்பியையும் பாதுகாத்து வரும் கால
வாழ்விற்கு உயர் இலக்கணம் குறி!

அபிஇலமாலிகா,
சித்தன்கேணி.

# மௌனத்தின் தேடல்- 710



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை

ஒரு தலைமை மேசனின் கீழ் நான்கு துணை மேசன்மார் வேலைபார்த்தனர். கோட்டை கட்டுவதில் சிற்றாள்களாக வேலை பார்த்த ஊழியக்காரர் ஒவ்வொருவருக்கும் சாப்பாட்டிற்கு வருடம் ஒன்றுக்கு 70 கண்டி சாமி அரிசி வழங்கப்பட்டது. கோட்டை கட்டும் வேலையைப் பலர் மேற்பார்வை செய்தனர். அவர்களைப் பண்டாரப் பிள்ளைகள் என்றனர். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 8 பணம் சம்பளமாக வழங்கப்பட்டன.

### 1622 ஆம் ஆண்டு கோடை கால இறுதி

போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை இன்று அழிந்துள்ள கோட்டை போன்று, நட்சத்திர வடிவத்தினை/ ஐங்கோண வடிவத்தினையுடையதன்று அது ஒரு சதுரவடிவக் கோட்டையாகும். கட்டப்படவிருக்கும் கோட்டையின் மாதிரி வடிவம். பிலிப் தே ஒலிவேறாவினால் முன்வைக்கப்பட்டிருந்தது. அவன் அதனை அடங்கா ஆவலோடு நோக்கினான்.

சதுர வடிவமான கோட்டை உயர்ந்த அரண் சுவர்களைக் கொண்டிருந்தது. நான்கு மூலைச் சுவர்களிலும் பலமான கொத்தளங்கள் அமைந்திருந்தன. அவற்றில் வடகிழக்குக் கொத்தளமும், தென்மேற்குக் கொத்தளமும் வேலின் முனைப்பு வடிவிலும், தென்கிழக்குக் கொத்தளமும், வடமேற்குக் கொத்தளமும் முக்கால் வட்டவடிவிலும் அமைந்திருந்தன. இக்கொத்தளங்களை இணைக்கும் அரண்சுவர்கள் அடித்தளத்தில் 40 அடிகள் அகலமானதாயும், மேற்புறத்தில் 20 அடிகளாக ஒடுங்கி 30 அடிகள் வரை அகழி மட்டத்திலிருந்து உயர்ந்து நின்றன. இந்த அரண்சுவர்களின் மையப்பகுதிகள் நான்கிலும் 20 அடிகள் அகலமான பகுதி வெளிப்புறமாகப் புடைத்து, மேலதிக சிறிய கொத்தளங்களாகக்





05 செங்கை ஆழியான்

காட்சி தந்தன. அவற்றில் மூன்று அரைவட்டவடிவிலும், ஒன்று 'ப' வடிவிலும் புடைத்து நின்றிருந்தன. 'ப' வடிவப் புடைப்பு கோட்டையின் தென் அரண்சுவர் கொண்டிருந்தது. தென் அரண் சுவரின் அடி வாரத்தில் யாழ்ப்பாணக் கடலின் அலைகள் மெதுவாகத் தழுவி அலையெறிந்தன. கடனீரேரி ஊடாக வரும் மரக்கலங்கள் தூரத்தில் நங்கூரமிட்டு நிற்க, சிறிய வள்ளங்கள் மூலம் கோட்டையின் தென் அரண் சுவரையடுத்துள்ள இறங்குதுறையை அடையக்கூடிய கட்டமைப்புகள் இருந்தன.

கொத்தளங்களும் அரண் சுவர்களும் போர்வீரர்களும் யுத்தத் தளபாடங்களும் இடரின்றி நகரக் கூடிய இடவசதியைக் கொண்டிருந்தன. கொத்தளங்களில் பீரங்கி வெளிகள் அமைந்திருந்தன.(தொடரும்)

---

# கடல் புறா




அமீர் கோட்டையின் வாயில்களைக் காக்கட்டும். அந்தக் காவலுக்கு வேண்டிய பணத்தைச் சேந்தன் அள்ளிவிடட்டும் என்றான்.

"இதெல்லாம் நடக்கப் பலவர்மன் அனுமதிக்க வேண்டுமே?" என்று வினவினான் கண்டியத் தேவன்.

"அனுமதிக்கும் அவசியத்தை நான் ஏற்படுத்துகிறேன்" என்று உறுதியுடன் கூறிய இளைய பல்லவன் ஒரு முடிவுக்கு வந்து திடீரென ஆசனத்திலிருந்து எழுந்தான். எழுந்து மரக்கலத்தின் சாளரத்துக்குச் சென்று தூரத்தே தெரிந்த அக்ஷயமுனைக் கோட்டையைச் சிறிது நேரம் உற்று நோக்கினான். பிறகு, அமீரைத் தன் அருகில் வரும்படி சைகை செய்து, "அமீர்! கோட்டையை நன்றாகக் கவனி," என்று கோட்டையைச் சுட்டிக்காட்டினான். அமீர் தன் பெரு விழிகளால் கோட்டையை நன்றாக ஆராய்ந்து விட்டு "மொத்தம் வாயில்கள் மூன்று இருக்கின்றன" என்று கூறிவிட்டுப் படைத் தலைவனை உற்றுநோக்கினான்.

இளையபல்லவன் அவனைத் திரும்பிப் பார்க்காமலே "இதோ பார் அமீர்! நான் சொன்ன திட்டம் நினைப்பிலிருக்கிறதல்லவா?" என்று கேட்டான்.

"அதற்குள்ளா மறந்துவிடுவேன்?" என்றான் அமீர்.

"மறதிக்காகச் சொல்லவில்லை. கோட்டையை நன்றாக உற்றுப் பார். நம் நாட்டுக் கோட்டைகளுக்கு வாயில்கள் எத்தனை உண்டு?"

"நான்கு" ஆமாம். ஆனால் இங்கே நான்காவது வாயில் இல்லை. நான்காவது வாயில் இருக்க வேண்டிய இடத்தில் மதில் பெரிதாக இருக்கிறது."

"ஆம்"

"அதை அடுத்து பகிட்பாரிஸான் மலைக்காடு இருக்கிறது.

"ஆம்"

"பூர்வகுடிகள் காட்டுவாசிகள். தவிர இந்த நகரத்தின் மீது கண்ணோட்டம் வைக்க ஒன்றுதான் இடம். அங்கு எப்பொழுதும் பூர்வகுடிகளின் நடமாட்டம் இருக்கும் என்று நினைக்கிறேன்."

"இருக்கலாம்."

"ஆகவே அந்தப் பகுதியில் காவலைப் பலப்படுத்திக்கொள். கோட்டையின் கடற்கரை வாயிலையும் மற்ற வாயில்களையும் நான் கவனித்துக் கொள்கிறேன்."

"அதற்கு நாமிருவரும்..." என்று இழுத்தான் அமீர்.

## நிதிப் பெட்டியா? சதிப்பெட்டியா?

"உயிருடனிருந்தால்தான் முடியும். நீ அங்கு காவல் புரியும்போது உன்னையும் உன்னுடன் இருப்பவரையும் வில்வலன் வீரர்கள் கொன்றாலும் கொல்லலாம். மாளிகையில் இருக்கும்போது நான் இறந்தாலும் இறக்கலாம். இந்த இரண்டையும் இரண்டு நாள்களுக்கு நாம் தவிர்த்துக் கொண்டால் நமது கால் அக்ஷய முனையில் பலமாக ஊன்றிவிடும். பிறகு பலவர்மனோ பூர்வகுடிகளோ யாரும் நம்மை அசைக்க முடியாது. ஆகவே இரண்டு நாள் எச்சரிக்கை தேவை. தவிர இந்த இரண்டு நாளும் அக்ஷயமுனைக் கோட்டை மக்களை நமது பக்கத்தில் இழுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கும் வழி இருக்கிறது." என்றான் படைத் தலைவன்.

"என்ன வழி?" என்று கேட்டான் அமீர்.

"பொறுத்துப் பார் அமீர்" என்று கூறிய இளைய பல்லவன் மற்ற உபதலைவர்களை நோக்கி, "உபதலைவர்களே, நானும் சேந்தனும் இன்னும் சில நாழிகைகளில் கோட்டைக்குள் செல்லப்போகிறோம். என்னிடமிருந்து செய்தி வரும்வரை நீங்கள் யாரும் மரக்கலத்தை விட்டு நகர வேண்டாம்." என்று கூறிவிட்டு, சேந்தா! நீயும் நம்மிடமுள்ள ஆறு பெட்டிகளும் என்னைத் தொடர வேண்டும். அதற்கு வேண்டிய மாலுமிகளைப் பொறுக்கிக்கொள். என்று சேந்தனை நோக்கி உத்தரவிட்டான். ஆறு பெட்டிகளுமா? என்று வாயைப் பிளந்தான் சேந்தன்.

ஆம். ஆறு பெட்டிகளும்தான். ஒன்றுகூட மரக்கலத்தில் இருக்க வேண்டாம். என்று திடமாக உத்தரவிட்டான் இளைய பல்லவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

393

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# இலக்கை அடைய அதிககாலம் எடுப்பது தோல்வி என்று ஆகிவிடாது

வாழ்க்கை உண்மையில் எளிமையானது. நாமே அதனை சிக்கல்கள் நிறைந்ததாக மாற்றிக்கொள்கிறோம். சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு எமது வாதிடும் குணாதிசயமும் கோபப்படும் தன்மையுமே பிரதானமான காரணமாக அமைகின்றது. ஒவ்வொரு தடவையும் கோபப்படும் பொழுது நாம் தோற்றுவிடுகிறோம்.

கோபத்தை ஏற்படுத்திய அந்தச் சூழ்நிலை எம்மை வெற்றி கொள்கிறது. கோபமான நிலையில் எமது புத்தி மங்கி சாதுரியம் குன்றி மனதாலும், உடலாலும் பிழையான தீர்மானங்கள் எடுக்கும் ஒரு பலவீனமான நிலைக்குத் தள்ளப்படுகிறோம்.

ஒரு விடயத்தை உணரக் கூடிய திறமைசாலிகள் என்று நாம் கருதுபவர்களுடன் மட்டும் வாதிடுவோம். எமது கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லுவோம். அவ்வாறானவர்கள் அல்ல என நாம் கருதுபவர்களுடன் வாதிட்டு நாமும் காயப்பட்டு மற்றவர்களையும் காயப்படுத்தும் முயற்சி எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அமைதியாக இருப்பது ஆமோதிப்பது என்று அர்த்தப்படாது. பேசிப்பயன்தராது என்று நினைக்கின்றபொழுது அல்லது உண்மை துலங்கக் காலம் கனிய வேண்டும் என்ற நிலை இருக்கும் பொழுது அமைதி சில சமயம் மிகப்பொருத்தமான ஆயுதமாக இருக்கலாம்.

எமது இலக்கை நோக்கிய பாதையில் நின்று குரைக்கும் ஒவ்வொரு நாய்களுக்கும் கல்லெறிய முற்படுவோமாயின் எமது பயணம் முற்றுப்பெற மாட்டாது என்று அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதே போலதான் வாழ்வில் ஏற்படும் இடையூறுகள் ஒவ்வொன்றுடனும் மோத முற்படுவோமாயின் எமது இலக்கை அடையமுடியாது.

இன்று ஒருவன் பலம் பொருந்தியவன் போலத் தோற்றப்படலாம். ஆனால் காலச்சக்கரத்தின் கரங்கள் மிகமிகப் பலமானது. காலம் மாற, காலம்கனிய கனகாலம் ஆகாது.

விடயங்களை அமைதியாகவும் உணர்வு பூர்வமாகவும் அணுக பழகிக்கொள்ளும் பயிற்சி



பயனுடையதாக அமையும். அந்தப்பயிற்சி அமைதியான முன்னோக்கிய பயணத்திற்கு உறுதுணையாக அமையும்.

எமது பயணத்தின்பொழுது எம்மீது கல்லெறிகள் விழலாம். அவற்றை எடுத்து திருப்பி எறிந்து அந்தக் கற்களை வீணடிப்பது புத்திசாதுரியம் ஆகாது. அந்தக் கற்களைக் கொண்டே எமது பாதையை செப்பனிட முயலுவோம். எமது பாதைக்கு உரம் சேர்ப்போம்.

எந்தப்பாதையில் பயணிப்பது என்ற தடுமாற்றம் தேவை அற்றது. மன உறுதியும் மனச்சாட்சியுடன் கூடிய உழைப்பும் இருக்குமாயின் நாம் பயணித்துக்கொண்டிருக்கும் பாதையே சரியான பாதையாக அமையும்.

எமது பயணத்தின் பொழுது காலம் பலவற்றை எமக்கு கற்றுத் தரும். நாம் எப்பொழுதும் கற்பதை நிறுத்தி விடமுடியாது. அதுவே எமது முன்னேற்றத்தின் உயிர் மூச்சு.

இது புத்தகக் கல்வி என்று அர்த்தப்படாது. ஏமாற்றங்கள், இழப்புகள்,வறுமை,ஏன் பசிகூட எமக்கு பலவற்றை கற்றுத்தரும். எம்மை பக்குவப்படுத்தும்.

எமது இலக்கை அடைய அதிக காலம் எடுப்பது தோல்வி என்று ஆகிவிடாது. எமது உண்மையான நோக்கங்களை நோக்கி அமைதியாக எடுத்துவைக்கும் ஒவ்வொரு காற் தடங்களும் வெற்றிக்கான பதிவுகளே. வாழ்க்கை குறுகியது. இந்தக் குறுகிய வெளியில் பகைவளர்த்து நேரத்தை வீணடிப்பது வெற்றிக்கு இடையூறாக அமையும்.

எம்மிடம் இருந்தவற்றை நாம் இழந்து விடும் பொழுது வேதனைப்படுகிறோம். கோபப்படுகிறோம். மனவிரக்தி அடைந்து தோல்வி மனோநிலைக்கு ஆட்படுகிறோம். ஆனால் அவை எம்மிடம் இருந்த காலத்தில் அவற்றை எண்ணி மகிழ்ச்சி அடைந்திருக்கிறோமா என்று எண்ணிப்பார்ப்போமாக இருந்தால் அந்தக் காலத்திலே அவை சம்பந்தமாக நாம் அக்கறை அற்றவர்களாக இருந்திருப்பது புலப்படும்.

எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சி அடையத் தெரியாமல் அவற்றை இழக்கும்பொழுது மட்டும் வேதனைப்படும் மனநிலை விசித்திரமானது. எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சியும் திருப்தியும் அடையும் மனநிலையை வளர்துக்கொள்ளும் பயிற்சி வெற்றிக்கு வித்திடும்.

நாம் உணர்ச்சிவசப்பட்டதாலோ தவறாக வழிநடத்தப்பட்டதாலோ எடுத்த தவறான முடிவுகளை சரிசெய்துகொள்வது தோல்வி என்று அர்த்தப்படாது. சிலரை தவறாக புரிந்துகொண்டு பிரிந்துவிடுகிறோம்.

வேறு சில தவறானவர்களை சரியாகப் புரிந்துகொள்ளாததால் அவர்களுடன் நெருங்கி அதன் காரணமாக நொந்து போகிறோம். இவை காலம் எமக்கு கற்றுக்கொடுக்கும் பாடங்கள்.

எமது துயர்களை நாமே எமது கைகளால் துடைத்து மற்றவர்களுக்கும் கைகொடுத்து நம்பிக்கை ஒளியில் வெற்றி இலக்கை நோக்கி பயணித்து ஆக வேண்டி இருக்கிறது. எமது அறிவு மங்கி விடவில்லை. சிந்தனை ஓட்டங்கள் சிதறிவிடவில்லை. மனதினதும் உடலினதும் பலம் அற்றுப்போகவில்லை. அதற்காக சந்தோசப்படுவோம்.

Dr. சி. சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து அடுத்த பகுதி வரும் ஜூன் மாதம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், பணம் கிடைத் தவுடன் மக்களுக்கு மேலும் நிவாரணம் வழங் கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதற்கான திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ள தாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் கட்டணம், குடிநீர் கட்டணம், வரி குறைப்பு ஆகியவற்றில் சில சலுகைகள் வழங்கப்படவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை, பொதுத் தேர்தலை ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் நடத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரி-6)



அபிவிருத்தி லொத்தர் சபை தனது வரலாற்றில் அதிக பட்சமாக ஈட்டிய இலாபத் தொகையான 36.6 பில்லியன் ரூபாவை ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்குவதற்கான காசோலையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் அஜித் குணரத்ன நாரகல நேற்று கையளித்தார்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 170 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 180 | 150-180 | 200 |
| தக்காளி | 80 | 80 | 120 | 60-80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 100-120 | 200 |
| கோவா | 250 | 200 | 250 | 250 | 300 |
| கரட் | 300 | 400 | 400 | 280 | 320 |
| பூசணி | 180 | 150 | 150 | 100 | 160 |
| புடோல் | 120 | 160 | 150 | -- | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 150 | 100-140 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 400 | 200-300 | 250 |
| பெரிய வெங்காயம் | 450 | 550 | 550 | 500 | 550 |
| பாகற்காய் | 300 | 300 | 250 | 250 | 250 |
| வெண்டக்காய் | 150 | 200 | 240 | 100-150 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 130 | 120 | -- | 150 |
| பயற்றங்காய் | 250 | 250 | 200 | 150-220 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 220 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 200 | 250 |
| கறிமிளகாய் | 300 | 200 | 330 | 350 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 650 | 300-700 | 800 |
| போஞ்சி | 300 | 250 | 300 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 120 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 350 | 250 | 200-300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 130 | 100 | 50-80 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 450 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | -- | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 100 | [illegible] |
| ஈரப்பலா | 80 | -- | -- | 80 | [illegible] |

# இன்று ஒரு தகவல் 81



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மருத்துவரின் மன இறுக்கம்

என்னோடு படித்த ஒருவர் இப்போது டொக்டராக இருக்கிறார். அவரைப் பார்த்து விட்டு வர லாம் என்று ஒரு தடவை போயிருந்தேன். அந்தச் சமயம் எனக்கும் உடம்பு சரியில்லை. அதைச் சொல்லி ஏதாவது மாத்திரை வாங்கிக்கொண்டு வரலாமே என்று நினைத்துக் கொண்டு போய் சொன்னேன். உடம்பு வலிக்கு ஏதாவது மாத்திரை கொடுத்து உதவலாம் என்றேன். அவர் உடனே கேட்டார் மூட்டுக்கு மூட்டு வலி கொஞ்சம் அதிகமாக இருக்கிறதா என்றார்.

ஆமாம் என்றேன். காலையிலே படுக்கையை விட்டு எழும் சமயம் தலை சுற்றுகிற மாதிரி இருக்கிறதா? என்றார். ஆமாம் என்றேன். சாப்பாட்டைப் பார்த்தாலே அது வேண்டாம் என்று தோன்றுகிறதா? என்றார். நீங்கள் சொல்லுவது எல்லாம் சரி... அது எப்படி இவ்வளவு நுணுக்கமாக கண்டுபிடிக்க முடிந்தது? என்று கேட்டேன்.

வேறு ஒன்றும் இல்லை! அதே குணம் எல்லாம் எனக்கு இப்ப இருந்து கொண்டு இருக்குது! அது தான் அவ்வளவு சரியாக சொல்ல முடிந்தது என்று சொல்லிக்கொண்டே எழுந்து போய் நான்கு மாத்திரையை எடுத்துக் கொண்டு வந்தார். என்னிடம் இரண்டு கொடுத்துவிட்டு அவர் இரண்டை சாப்பிட்டுத் தண்ணீரைக் குடித்தார். டொக்டர் என்பதனாலே வியாதிகள் விலகிப்போவது இல்லை. டொக்டர்களுக்கு ஏற்படுகிற மன இறுக்கம் பல சமயங்களிலே அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பாதித்து விடுகிறது. இதைப் பற்றியெல்லாம் கூட வெளிநாடுகளிலே சில ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

இங்கிலாந்திலே ஒரு புள்ளிவிவரம் எடுத்தார்களாம். அங்கே பொதுமக்களை விட டொக்டர்களிடம் தான் தற்கொலை விகிதம் அதிகமாக இருக்கின்றதாம். மதுவினாலே கல்லீரல் அழற்சி ஏற்படுகின்ற விகிதமும் அதிகமாக இருக்கின்றதாம். டொக்டரின் உடல் நலம் கெடுவதற்கு முக்கியமான காரணமாக இருப்பது மன இறுக்கம் தான்.

விளம்பர நிறுவனங்களிலே வேலை செய்கின்றவர்கள், பத்திரிகைக்காரர்கள், பொலிஸார்கள், விமானிகள் இவர்களுக்கு அடுத்துயாக மன இறுக்கத்திற்கு அதிகமாக ஆளாகிறவர்கள் டொக்டர்கள் தானாம். சாகக் கிடக்கின்ற நோயாளியை எப்படியாவது பிழைக்க வைத்துவிட வேண்டும் என்பதற்காக சாப்பாட்டைக் கூட மறந்து இரவு முழுவதுமாகக் கண்ணை முழித்துக்கொண்டு உட்கார்ந்து இருக்க வேண்டியிருக்கிறது. டென்ஷன் வராமே இருக்குமா? பாதி இரவிலே வந்து கதவைத் தட்டுவார்கள். எழுந்து என்ன? என்று கேட்டால் டொக்டர் உடனே புறப்படுங்கள். அங்கே ஒருவர் உயிருக்குப் போராடிக் கொண்டு இருக்கிறார் என்பார்கள். டென்ஷன் ஆகாமல் என்ன செய்யும்?

சிலபேர் நடுராத்திரியிலே டொக்டர் வீட்டுக்கு போன் செய்து வயிறு வலிக்கிறது டொக்டர் என்ன செய்யலாம் சொல்லுங்கள்! என்று கேட்பார்கள். இருவரும் அவசரத்துக்கு இரண்டு அஸ்பிரின் மாத்திரையைப் போட்டுக்கொண்டு தூங்குங்கள். காலையிலே பார்த்துக்கலாம் என்று போனில் பதில் சொல்லுவார். அவர் உடனே டொக்டர் சொன்ன மாதிரி இரண்டு மாத்திரையை சாப்பிட்டுவிட்டு நிம்மதியாக தூங்கிப்போயிடுவார்.

ஆனால் இங்கே டொக்டருக்கு தூக்கம் வராது ஏன் தெரியுமா? அந்த ஆள் வயிறு வலிக்குது என்று சொன்னாரே வயிற்றிலே ஏதாவது கட்டியாக இருக்குமா? இல்லை வேறு ஏதாவது பெரிய கோளாறாக இருக்குமா? அஸ்பிரின் அவருக்கு ஏதாவது ஆபத்தை உண்டாக்கி விடுமோ? அப்படி என்றெல்லாம் நினைத்து கவலைப்பட்டுக் கொண்டு இரவு முழுவதும் தூங்கமாட்டார்.


ஜான்ஹோவி என்று ஒருவர். இவர் இங்கிலாந்திலே எடின்பரோ பல்கலைக்கழகத்திலே பொது மருத்துவத்துறை பேராசிரியர். இவர் நிறையவே ஆய்வுகள் எல்லாம் செய்து இருக்கிறார். பொது வைத்தியம் செய்கிற டொக்டர்களுக்கு மன இறுக்கத்தை உண்டாக்கிற சில காரணங்களை அவர் கண்டு பிடித்து இருக்கிறார். தன்னாலே முடிந்த வரை அதிகமான எண்ணிக்கையில் நோயாளிகளை இழுத்துப் போட்டு சிகிச்சை செய்ய முயற்சி செய்வதும் ஒரு காரணம். தொந்தரவு செய்யும் நோயாளிகளும் ஒரு காரணம். சக பணியாளர்களிடம் எரிச்சல் படுவதும் ஒரு காரணம். தாமதங்கள், இடையூறுகள் இதனாலே கோபமடைவதும் ஒரு காரணம். இதை எல்லாம் கண்டு பிடித்து சொல்லுகின்ற அந்த பேராசிரியர் டொக்டர்களுக்கு என்னயோசனைசொல்கிறார் தெரியுமா? இடையூறுகள், தாமதங்கள் இவை எல்லாம் இருக்கத்தான் செய்யும் தவிர்க்க முடியாது. அதனாலே டொக்டராக இருக்கிறவர்கள் தமது பணியிலே எதிர்பார்க்க முடியாத சில சூழ்நிலைகள் ஏற்படத்தான் செய்யும் என்பதை மனதார ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படி ஒப்புக்கொண்டு அதனாலே சம நிலையை இழக்காமல் இருக்க பழகிக்கொள்ள வேண்டும் என்கிறார்.

அனுபவம் உள்ள மூத்த பொதுவைத்திய டொக்டர்கள் இளைஞர்கள் மாதிரி அவ்வளவு நெருக்கடிகளாலே பாதிக்கப்படுவதில்லை.

ஜென்னி என்னும் ஒரு உளவியல் டொக்டர் 170 இளம் டொக்டர்கள். அவர்கள் பணியிலே படிப்படியாக முன்னேறிக்கொண்டு வருவதை கண்காணித்து கொண்டே வந்தார். அவர்களுக்கு கடுமையான மன இறுக்கம் உண்டாகுவதற்கு என்ன காரணம் என்று கண்டு பிடித்தார். நோயாளி சாகிறது, சாகிற நிலையில் இருப்பது.... மூத்த மருத்துவ டொக் டர்களிடம் சுமூகமான ஒரு உறவு இல்லாமல் போவது, தவறு செய்வது, கடினமான வேலை, தூக்கம் இழப்பு, இவை எல்லாம் இளம் டொக்டர்களுக்கு கடுமையான மன இறுக்கம் உண்டாக்கு வதாக அவர் கண்டுபிடித்து உள்ளார். பணியிலே சேர்ந்து மூன்று வருடத்திற்கு பிறகு இது படிப்படியாக குறைந்து விடுவதாகவும் ஜென்னி எனும் டொக்டர் கண்டு பிடித்து சொல்கிறார். இது வரைக்கும் சொன்னவை எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். நமது ஊரில் எல்லாம் டொக்டர்களுக்கு டென்சனை அதிகப்படுத்துவது நோயாளிகள் தான். சிலபேர் தனக்கு என்ன வியாதி என்பதையே டொக்டர்களிடம் சொல்ல மாட்டார்கள். அவர்கள் தான் டொக்டர் ஆச்சே.. கண்டு பிடிக்கட்டும் என்று ஒரு நினைப்பு. இப்படிப்பட்ட ஒருவர் ஒரு டொக்டரிடம் வந்தார் உடம்பு என்ன செய்கிறது என்று டொக்டர் கேட்டார். அதை நீங்கள் தான் கண்டு பிடித்து மருந்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார். இதை கவனித்து கொண்டு பக்கத்தில் இருந்த ஒருவர் சொன்னார். இதோ பாரப்பா உடம்பிற்கு என்ன என்பதை டொக்டர்களிடம் சொல்லி ஒத்துழைச்சாத்தான் சிகிச்சை கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். நோயாளிகளிடம் வைத்தியம் செய்ய வேண்டும் என்றால் அதற்கு அடுத்த தெருவிலே ஒரு மருத்துவமனை இருக்குமோ என்றார். அது எந்த வைத்தியசாலைன்று அர்வமாக கேட்டார்இவர். [illegible] என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துக்குள்ளான விமானம் உயிர் தப்பிய ஸ்பெயின் பிரதமர்



(மாட்ரிட்)

ஸ்பெயின் நாட்டின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் தனது குடும்பத்துடன் பயணித்த விமானம் விபதுக்குள்ளாகியது.

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் தொடர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறையை தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக கழிப்பதற்காக அந்நாட்டு பிரதமர் பெட்ரோ சான் செஸ் ஸ்பெயினின் தெற்கு பகுதியிலுள்ள டோனானா தேசிய பூங்காவுக்கு சுற்றுலா சென்றுள்ளார்.

அதன்படி, தலைநகர் மாட்ரிட்டில் இருந்து சிறிய ரக விமானம் மூலம் பயணித்த அவர்கள் புறப்பட்ட சிறிது நேரத்தில் குறித்த விமானம் விமானியின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது.


இதனையடுத்து, அதிர்ச்சியடைந்த விமானி உடனடியாகக் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டதையடுத்து அந்த விமானம் மீண்டும் மாட்ரிட் விமான நிலையத்திலேயே அவசரமாக தரையிறக்கப்பட்டது.

அங்கு தயாராக நின்று கொண்டிருந்த மீட்பு படையினர் பிரதமர் மற்றும் அவரது குடும்பத்தினரை பத்திரமாக வெளியே அழைத்து வந்தனர்.

இந்த சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது. எனினும் அதிஷ்டவசமாக பிரதமர் தனது குடும்பத்தினருடன் உயிர் தப்பினார்.

சம்பவம் குறித்து, விசாரணைகளை ஆரம்பித்துள்ள விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் தொழில்நுட்ப கோளாறால் விமானத்தின் என்ஜின் செயலிழந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிவித்துள்ளனர். (நி-6)

# நடிகர் டேனியல் பாலாஜி உயிரிழப்பு



(சென்னை)

பிரபல நடிகர் டேனியல் பாலாஜி மாரடைப்பால் தனது 48 ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

டேனியல் பாலாஜிக்கு நேற்று முன்தினம் இரவு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி காலமானார்.

இவர் பொல்லாதவன், காக்க காக்க உள்ளிட்ட படங்களில் நடித்து ரசிகர்கள் மனதில் மறக்க முடியாத வில்லன் நடிகராக வலம் வந்தவர்.

சித்தி நாடகத்தில் நடிகராக அறிமுகமான இவர் வேட்டையாடு விளையாடு, பைரவா மற்றும் வட சென்னை உள்ளிட்ட பல படங்களில் வில்லனாக நடித்துள்ளார்.

இவரின் மறைவு திரையுலகினர் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (நி-6)

# செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்ட இராட்சத மலைப்பாம்பு மீட்பு

(ஒட்டாவா)

கனடாவில் வீடொன்றில் செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்ட இராட்சத மலைப்பாம்பு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பாம்பினை பிரிட்டிஸ் கொலம்பிய மாகாணத்தின் வனவிலங்கு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இதன்போது மீட்கப்பட்ட இராட்சத மலைப்பாம்பு ஒன்பது அடி நீளமானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்நாட்டில் தனிச்சிறப்புடைய விலங்கினங்கள் வீட்டில் செல்லப் பிராணிகளாக வளர்ப்பது தடை செய்யப்பட்டுள்ளது.


இந்நிலையில் இராட்சத மலைப்பாம்பினை வீட்டில் வளர்த்த குற்றத்திற்காக நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தொடரப்பட உள்ளது.

சட்ட விரோதமான முறையில் இவ்வாறு விலங்குகளை வீட்டில் வளர்ப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இதற்காக ஒரு லட்சம் டொலர் அபராதம் அல்லது ஓராண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

# பரமபிதா காட்டிய பாதை

## இயேசுவின் உயிர்ப்பு, நீதி அமைதியாக வெற்றி பெறும் என்ற உண்மையாகும்



உயிர்ப்புப் பெருவிழா இன்று. இயேசுவின் உயிரத்தெழுதலை "ஈஸ்டர்" என உலகக் கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள். இயேசுவின் உயிரத்தெழுதலை இன்று வரை பல இறையியலாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர் என்பது நாமறிந்ததே. இயேசுவின் உடல் கல்லறையில் வைக்கப்பட்டு காவல் செய்து உயிர்த்தெழுதலைத் தடுப்பதற்கு. ஆனால் கல்லறை காலியாக இயேசு உயிர்பெற்றார்.

கத்தோலிக்கர்கள் கொண்டாடுகின்ற திருவிழாக்களிலெல்லாம் தலைசிறந்த விழா, இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா. அது கத்தோலிக்க விசுவாசத்தின் பெருவிழா. கத்தோலிக்க வாழ்வுக்கு அடித்தளமாக இருந்து அர்த்தம் தருவது இயேசுவின் உயிர்ப்பே. இயேசு உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும் என்று புனித பவுல் பைபிளில் குறிப்பிடுகின்றார்.

சித்திரவதை செய்து கொல்லப்பட்ட மனிதன் மீண்டும் உயிர்பெற்று எழுந்தார் என்று கூறுவது மடமைத்தனம். எவன் நம்புவான்? என்ன ஆதாரம்? எங்காவது இறந்த வன் உயிர் பெற்று எழுவதுண்டா? இயேசு உண்மையா கவே உயிர்த்து விட்டாரா? இயேசுவைப் பற்றி முழுமை யாய் அறிந்திராதவர்கள் எல்லோர் மனதில் எழும் கேள்வி இதுதான் எனலாம்.

ஹார்வர்ட் பல்கலைக் கழகச் சட்டப் பேராசிரியரும் இங்கிலாந்து நாட்டின் நோட் டிங் ஹாம் என்கிற இடத்தி லுள்ள தூய யோவான் கல்லூரி முதல்வருமான கலாநிதி மைக் கல் கிரீன் லீப் உலகப் புகழ்மிக்க "சட்ட சாட்சியர் தொகுதி" என்னும் நூலின் நூலாசிரியராவார். இவர் இயேசு உயிர்த்ததற்கான சாட்சியம் பற்றிய ஆய்வில் ஈடுபடு கையில் மேற்குறிப்பிட்டவாறு இயேசுவின் உயிர்ப்பு வெறும் கட்டுக்கதை என்று கருதினார்.

ஆனால் பைபிளை ஆழமாகப் படித்து, ஆராய்ந்து, தேய்ந்து, ஆழ்ந்து சிந்தித்த பின் பைபிளில் மறுக்க முடியாத ஆதாரமுள்ள, உயிருள்ள சாட்சிகள் உண்டு என்று கண்டறிந்தார். உயிர்ப்பு குறித்த ஐயத்திலிருந்து உண்மை அவரை விடுதலை செய்தது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக மாணவர்கள் இருவரும் அவரைப் போலவே மறுத்து வந்து பின் உண்மை ஆதாரங்களை அறிந்து உணர்ந்து மனம் மாறினர். கலாநிதி மைக்கல் கிரீன் எழுதினார்: "இயேசு உயிர்க்கவில்லை என்றால் அவருடன் வாழ்ந்த சீடர்கள் ஓர் உண்மையை உறுதிபடுத்தியிருக்க முடியாது! ஏனென்றால் அந்த உண்மையை உலகறியச் சாட்சியம் கூறியதற்காக அவர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். மறுத்துக் கூறுமாறு சிறையில் அடைக்கப்பட்டார்கள். உண்மைக்குச் சான்று பகர உயிரையும் கொடுத்தார்கள்" - உயிர்ப்புக்கு உயிருள்ள சாட்சிகள் அவர்களே என்றார்.

"இயேசு ஒரு போலி மெசியா. தந்தை யாவேயைப் பழித்துப் பேசியவர். அவரது பெயரால் உருவான கிறிஸ்தவத்தை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டும்" என்று முழுமூச்சுடன் செயற்பட்டவர் சவுல். உரோமர்களிடமிருந்து கிறிஸ்தவர்கள் யார்? கிறிஸ்தவம் பரப்புவோர் யார்? என்ற ஆவண விபரங்களுடன் அவர்களைச் சிறைபிடித்துக் கொல்லவேண்டும் என்று தமஸ்கு நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்தார் சவுல். உயிர்த்த இயேசுவினால் அப்போது தடுத்தாளப்பட்டார்.

அவர் வாழ்வே உயிர்த்த இயேசுவுக்கு, கி.பி. 67இல் ஆதாரமான சாட்சியம் ஆகியது! என்று எழுதி கலாநிதி மைக்கல் கிரீன் ஓர் ஆய்வு நூலை வெளியிட்டார்.

ஒருமுறை இங்கிலாந்து நாட்டுத் தலைமை நீதி அரசராக இருந்த மேமிகு லார்ட்டார்லிங் கூறுகிறார் "ஏற் கெனவே காணக்கிடைத்துள்ள அளவுக்கு அதிகமான சாட்சியங்கள் பலபல. உடன்பாடான சாட்சியங்கள், சூழ்நிலைச் சாட்சியங்கள், உண்மைச் சாட்சியங்கள் போன்றவற்றின் அடிப்படையில் உலகின் அறிவாற்றல் மிக்க எந்த நீதியரசரும் இயேசு உயிர்த்த செய்தி மெய்யே என்று தீர்ப்பு வழங்கத் தவற மாட்டார்". ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் தாமஸ் ஆர்னால்டு "உரோ மானியர் வரலாறு" என்னும் ஆராய்ச்சி நூலை ஆக்கியவர்.

வரலாற்று விழிகளையே மூடிவிட்டால்தான் இயேசுவின் உயிர்ப்பை மறுக்க முயல முடியும் என்று எழுதினார். "வரலாறு குறித்த நோக்குகளும் இயேசு உயிர்த்ததற்கான சான்றுகளும்" என்னும் ஆய்வு நூலை வரலாற்று ஆதாரங்களுடன் வெளியிட்டார்.

பைபிளை முழுமையாக வாசித்த எவராலும், இயேசுவின் உயிர்ப்பு ஒரு கட்டுக்கதை என்று கற்பிதம் செய்யவே முடியாது என்றார். இயேசு உயிர்த்தெழுந்த உண்மைக்கு 500 இற்கு மேற்பட்ட சாட்சியங்கள் உயிருள்ளோர் மகதல மரியா முதற்சாட்சி. கதவைப் பூட்டி உள்ளே அஞ்சி நடுங்கிய சீடர்கள் 11 பேர், எட்டு நாள் பின்னர் தோமா உள்ளிட்ட சீடர்கள், பின்பு திபேரியக் கடல் அருகே பேதுரு, திதிம்தோமா, கான நத்தனியேல், செபதேயு மக்கள், மீண்டும் எம்மாவுஸ் சீடர் இருவர்.

பின்பு ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சகோதரர் சகோதரிகளுக்கு ஒரே நேரத்தில் தோன்றினார். கடைசியில் எனக்கும் தோன்றினார் என்கிறார் பவுல் அடியார். நாம் சாட்சிகளா இன்று?

**ம.பிரான்சிஸ்க்,**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிதாமகர் உயிர்த்த நாளில் இந்த மண்ணில் நடந்த கொடுமை

பிதாமகர் இயேசுபிரான் உயிர்த்தெழுந்த நாள் இன்று. அக்கிரமவாதிகளின் அதர்மத்தால் வதைபட்ட இயேசுபிரான் மானிடத்தின் பாவங்களைச் சுமந்து சிலுவையில் அறை பட்டார்.

அந்தோ! இறைமகனுக்கு இத்துணை கொடுமை எனும்போது, இவ்வுலகில் எத்தகைய கொடியவர்களும் அறியாதவர்களும் உள்ளனர் என்பது தெரிகிறது.

ஆம், வெள்ளிக் காசுகளுக்கு விலை போன யூதாஸ் இயேசுபிரானைக் காட்டிக் கொடுக்கின்றான்.

பிலாத்து மன்னனோ பாவம் தன்னைச் சேராதிருப்பதாக, என்று கூறி நீர்கொண்டு கைகழுவுகின்றான்.

என்னே! கொடுமை. இறை மகனைக் காப்பாற்றுவதற்கு எவரும் இல்லை. இதுவே இவ்வுலகில் நடந்தாகும் என்பதை பிதாமகர் தன் மூலம் நமக்கு உணர்த்தியுள்ளார்.

உண்மை. ஒளியைக் கண்டு அஞ்சுகின்ற கயவர்கள் இந்த உலகில் அதிகமாக இருப்பர்.

காட்டிக் கொடுப்பதன் மூலம் தாம் வாழ முடியும் என்று எண்ணுகின்ற அறிவிலிகள் ஆண்டவனுக்கும் அநீதி இழைப்பர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தத்தம் கடமைகளை நிறைவேற்ற முடியாத தலைவர்கள் இறைமகனாயினும் கைகழுவி நழுவி விடுவர். இதுவே இந்த மண்ணுலகின் இயல்பு என்பதை உணர்த்துவதே இயேசுவின் பாடுகளாகும்.

இயேசுபிரான் தன் பாடுகள் மூலமும் சிலுவையில் அறைபட்டதன் ஊடாகவும் இவை உலகில் நடக்கக்கூடியவை என்று உணர்த்தியவை, நம் நாட்டில் சதா நடந்து கொண்டே இருக்கின்றன.

அதன் உச்சம்தான் நம் நாட்டில் 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தில் தேவாலயங்கள் மீது நடந்த குண்டுத் தாக்குதலாகும்.

அந்தோ! புனிதமான உயிர்த்த ஞாயிறு தினத்தில் பொதுமக்கள் ஆண்டவர் இயேசுவை பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும்வேளை, சமநேரத்தில் தேவாலயங்கள் மீதும் கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதிகளிலும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

ஒரு கணப்பொழுது. எங்கும் மரண ஓலம். அவலக் குரல். துடிக்கின்ற உடல்கள் என்னே அக்கிரமம்.

உயிரிழந்த தன் தாய்க்கு அருகில் நின்று அழுகின்ற ஒரு குழந்தை. அந்தக் காட்சி உலகம் முழுவதையும் கலங்க வைத்தது.

ஆனாலும் அந்தக் கொடியவர்கள் யார் என்பது இன்னமும் வெளிப்படாத மர்மமாக வேயுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கூறுகிறார்; ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்பது எனக்குத் தெரியும். நீதிமன்றம் உத்தரவிட்டால் அதனைக் கூற நான் தயாராக இருக்கின்றேன் என்று.

ஆ! கடவுளே இவர்கள் தான் இந்த நாட்டின் தலைவர்கள் என்றால், யூதாஸ்களை நாம் மன்னிப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஏனெனில் காட்டிக் கொடுப்புக்காக யூதாஸ் வருந்தினான். தன் உயிரை மாய்த்தான்.

ஆனால் இவர்கள் நீதிமன்றம் ஏறிய போதேனும் உண்மையைச் சொல்லவில்லை. அப்படியாயின் ஈனத்தனம் இன்னமும் உயிர்ப்போடுதான் உள்ளது.

# இறுதிக்காலத்திலாவது உறவுகளை ஒருமுறை பார்க்க வேண்டும்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டவலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சியில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2594 நாட்கள் நிறைவடைகின்ற நிலையில் கிளிநொச்சி A9 வீதியில் ஆனந்தபுரத்திலுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அலுவலகத்திற்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பதாகைகளையும் தமது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் படங்களையும் ஏந்தியவாறு குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்பொழுது வயது முதிர்ந்த முடியாத நிலையிலும் இறுதி காலத்திலாவது தமது உறவுகளை ஒரு முறைபார்க்க வேண்டுமென ஆவலாக உள்ளதாக கவனயீர்ப்பில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

கடந்த ஏழு வருட காலமாக இராணுவத்தினரிடம் ஒப்படைத்த தமது உறவுகளை மீட்டுத்தர வலியுறுத்தி போராடிவரும் நிலையில் இதுவரையில் எவராலும் எந்த தீர்வும் பெற்றுத்தரப்படவில்லை. இதனை வலியுறுத்தி கடந்த பன்னிரண்டாம் திகதி மனித உரிமை பேரவையில் நடைபெற்ற இலங்கை தொடர்பான விவாதத்திலும் தாம் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நிலைமைகள் தொடர்பாக 8 மாவட்டங்களில் சேர்ந்த உறுப்பினர்கள் மனித உரிமை பேரவையிலும் தமக்கான உரிய தீர்வினை பெற்றுதர வேண்டுமென வலியுறுத்தியிருந்ததாக தெரிவித்தனர். (நி-6-316)

## ஏப்ரல் 8 ஆம் திகதி முழு சூரிய கிரகணம்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி முழு சூரிய கிரகணம் தோன்றும் என நாசா தெரிவித்துள்ளது.

அத்துடன் குறித்த சூரிய கிரகணத்தை வட அமெரிக்காவில் மட்டுமே அவதானிக்க முடியும் எனவும் நாசா குறிப்பிட்டுள்ளது.

சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் கடந்து செல்லும் போது முழு சூரிய கிரகணம் ஏற்படுகிறது.

இதன் போது சூரியனின் ஒரு பகுதி அல்லது முழுவதுமாக மறைகிறது.

இந்த நிலையில் இது போன்ற அரிதான முழு சூரிய கிரகணத்தை அவதானிக்கும் வாய்ப்பு வட அமெரிக்கர்களுக்கு கிடைத்துள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. (நி-6)

## ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஆரம்பம்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்காக ஏற்கனவே ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே இந்த வருட இறுதிக்குள் கட்டாயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி தேர்தலுக்கான எழுது கருவி பொருட்களை கொள்வனவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தேர்தல் தொடர்பில் அனைத்து உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (நி-6)

# சூழியக் கழிவு தினத்தையொட்டி யாழில் இடம்பெற்ற ஆரோக்கிய பவனி

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக சூழியக் கழிவு தினமான நேற்று யாழ் நகரில் 'யாழ் ஆரோக்கிய பவனி தூய்மை யாக்கல் பணியும் விழிப்புணர்வு செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

இந்தியத் துணைத் தூதரகம், மாநகர சபை, யாழ்.பிரதேச செயலகம், தொல்லியல் திணைக்களம் மற்றும் பொலிஸார் ஆகியோரின் பங்கேற்பில் சிகரம் நிறுவனத்தின் படலை வடமாகாண சுற்றுலா சேவைப் பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில், யாழ்.மாநகர பகுதியில் தூய நகரை உருவாக்கு வதை இலக்காகக் கொண்ட குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

யாழ்.நகரின் பிரதான வீதிகள் சிலவற்றின் ஊடாகவும் மணிக்கூட்டுக் கோபுரம் முதல் பண்ணை சுற்று வட்டம் வரையிலான பகுதியிலும் தூய்மைக்கால் பணி முன்னெடுக்கப்பட்டது.

பண்ணை நடைபாதை, யாழ்.கோட்டை உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் பகுதிகளை நிரந்தரமாக தூய்மையாகப் பேணும் வழிவகைகள் குறித்த கலந்துரையாடலும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், இந்தியத் துணைத் தூதுவர், யாழ்.மாநகர ஆணையாளர், மாநகரசபையின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் வணிகர் கழக பிரதிநிதிகள், தன்னார்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (நி-6-33)

## அமெரிக்க கப்பல் விபத்தின் மீட்புப்பணி இடைநிறுத்தம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மேரிலாந்தில் பால்டிமோர் பால விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் ஆறு பேர் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு விபத்தில் சிக்கியவர்களில் இரண்டு பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் ஏனைய நான்கு பேர் உயிரிழந்திருக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பாரிய மீட்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க கரையோரப் பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன், கொங்கிரீட் தூண்கள், இரும்புக் கம்பிகள் போன்றவற்றினால் மீட்புப் பணிகளை மேற்கொள்வோருக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த பகுதியில் காணப்படும் இடிபாடுகள் அகற்றப்படும் வரையில் நீரில் மூழ்கிய பணியாளர்களது உடல்களை மீட்பது சாத்தியமற்றது என சுழியோடிகள் தெரிவிக்கின்றனர். (நி-6)

## கொழும்பை வந்தடைந்த 'குயின் விக்டோரியா'

(கொழும்பு)

குயின் விக்டோரியா என்ற சொகுசு ரக பயணிகள் கப்பல் நேற்று அதிகாலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

சிங்கப்பூரில் இருந்து வந்த குறித்த கப்பலில் 1,812 சுற்றுலாப் பயணிகளும் 964 பணிக் குழாமினரும் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளே குறித்த கப்பலில் இலங்கையை வந்தடைந்துள்ளனர். (நி-6)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் யா/ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி முதல்வர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அலுவலக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூதனமான முறையில் அமைக்கப்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## ஒருவர் கைது

(நெளுக்குளம்)

முள்ளியவளையில் வீட்டுக் காணி ஒன்றில் பைப்லைன் மூலமாக சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்து விநியோகத்தில் ஈடுபட்ட குடும்பஸ்தர ஒருவர் நேற்று முன்தினம் முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாமூலை நீல கண்டபுரம் கிராமத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை இடம்பெற்று வருவதாக முள்ளியவளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் தேடுதல் நடத்திய வேளையே கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது அங்கு நிலத்தில் புதைக்கப்பட்ட சட்டவிரோத மதுபானமான கோடாவினை அதன் மேல் பைப்லைன் செய்து வைத்துள்ளமை கண்டறியப்பட்டதையடுத்து இரு பெரல் கோடா இதன்போது மீட்கப்பட்டதோடு அந்நபரையும் கைது செய்த முள்ளியவளை பொலிஸார் மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களையும் சந்தேக நபரையும் மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-299)

# மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கி வைப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் AU Lanka நிறுவனத்தினால் இலவசமாக நேற்று முன்தினம் இக்கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் AU Lanka நிறுவன அனுசரணை திட்ட இணைப்பாளர் இ.மேரியன், சமூக செயற்பாட்டாளரான து.சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டு 12 பேருக்கான மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தது. (நி-6-350)



சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட பொறியியலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் "உதிரம் கொடுப்போம்! உயிரைக் காப்போம்!" எனும் தொனிப் பொருளில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

(படம்:-தேவானந்தன்)

## சுகாதார பணிப்பாளருக்கு அஞ்சலி

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் அகிலேந்திரனுக்கு அஞ்சலி நிகழ்வு நேற்று மாஞ்சோலை வைத்தியசாலையில் மாவட்ட பொது வைத்தியசாலையின் ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவை சங்கத்தின் தலைவர் கஜேந்திரன் தலைமையில் குறித்த அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியாகள், பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தினர். (நி-6-299)

# சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை

(அக்கராயன்



முல்லைத்தீவு மாவட்டத்தில் அனுமதிகளற்ற மணல் அகழ்வுகளை தடுப்பதற்கு பொலிஸார் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

மாவட்டச் செயலக சூழல் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் அனுமதிகள் வழங்கப்படுகின்றமைக்கு அப்பால் அனுமதிகளற்ற சட்டவிரோத மணல் அகழ்வுகள் நடைபெறுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன.


கிடைக்கின்ற முறைப்பாடுகளின் பிரகாரம் பொலிஸாரினை நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தி உள்ளதாக மேலும் தெரிவித்தார். (நி-6-350)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3076

### சஷ்மிகா




### தஸ்வின்




### கோபிகா




### தயா




### டல்சி




### சரணியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண வீட்டில்...

படுகாயம் அடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சுதந்திரபுரம் மத்தி கிராமத் தில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில்,

சுதந்திரபுரம் மத்தி பகுதியினை சேர்ந்த 61 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 24.03.2024 அன்று தென்னை மரத்தில் தேங்காய் பறிப் பதற்காக ஏறியபோது தவறிவீழ்ந்து காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் கடந்த 28.03.2024 அன்று உயிரிழந் தார்.

அவரின் இறுதி நிகழ்வுகள் நேற்று முன்தினம் (29.03.2024) சுதந்திரபுரம் மத்தி பகுதியில் உள்ள அவரின் வீட் டில் நடைபெற்றது.

இதற்கு யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டையில் இருந்து அவரின் உற வினர்கள் வருகை தந்திருந்தனர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டையில் இருந்து வருகை தந்த இளைஞர்களுக்கும் சுதந்திரபுரம் பகுதி யினைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் சுடலையில் வைத்து வாய்த்தர்க்கம் ஏற் பட்டுள்ளது.

அது பின்னர் கைகலப்பாக மாறி சுடலையில் வைத்து தாக்குதல் மேற் கொண்டு பின்னர் இறந்தவரின் வீட் டில் வைத்தும் கொட்டன்கள், கத்திகள் கொண்டு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டையில் இருந்து வருகை தந்த உறவினர்களில் மூவரும் சுதந்திரபுரம் பகுதியினைச் சேர்ந்த இளைஞர்களில் மூவரும் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் யாழ்ப்பாணத்தினை சேர்ந்த ஒருவர் தீவிர சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர் பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (ம-7,10,299)

## கோழி இறைச்சி...

தாக அகில இலங்கை கால்நடை உற் பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள் ளது.

பண்டிகைக் காலத்தில் 1,000 ரூபா யுக்கு கோழி இறைச்சியினை விற் பனை செய்ய முடியும் என, அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர் கள் சங்கத்தின் தலைவர் அஜித் குண சேகர தெரிவித்துள்ளார். (ம-7,10)

## தடுப்பூசி...

சம்பவம் தொடர்பில் வைத்திய சாலை மட்டத்திலும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக ராகம போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சம்பத் ரணவீர தெரிவித் தார்.

கோ அமோக்சிக்லாவ் எனும் தடுப் பூசியைச் செலுத்தியதன் பின்னர் குறித்த நோயாளி உயிரிழந்தார்.

எனினும் தடுப்பூசியினால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக குறித்த மர ணம் ஏற்பட்டதா என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

உயிரிழந்தவர் 50 வயதுடையவர் எனவும் காது தொடர்பான சுகயீனம் காரணமாக கடந்த 22ஆம் திகதி ராகம போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (ம-7,10)

## நானே...

வது தொடர்பில் ஜனாதிபதியின் கவ னத்தை ஈர்ப்பதே இந்த கலந்துரை யாடலின் முக்கிய நோக்கமாக இருந் துள்ளது.

என்றாலும், எதிர்காலத்தில் ஜனாதி பதித் தேர்தலை முதலில் நடத்தப்படும் என்றும், தாம் உருவாக்கும் கூட்டணி யின் வேட்பாளராக தானே களமிறங்கு வேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க, பசிலிடம் எடுத்துரைத்துள்ளார்.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர் தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிக்கும் வேட்பாளர் தொடர் பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப் படவில்லை என பசில் ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

எவ்வாறாயினும் கட்சியின் எதிர்காலம் மற்றும் நாட்டின் எதிர்காலம் பற்றி சிந் தித்தால் முதலில் பொதுத் தேர்த லையே நடத்த வேண்டும் என பசில் ராஜபக்ஷ விடம் இந்த சந்திப்பில் எடுத்துரைத்த தாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் ஜனாதிபதித் தேர்தலையே கோருவதாகவும், வீழ்ந்த நாட்டை தாம் கட்டியெழுப்பியுள்ளதால் மக்கள் தம் மைப் புறக்கணிப்பார்கள் என ரணில் விக் கிரமசிங்க, பசிலிடம் வலியுறுத்தியுள்ள தாகவும் தெரியவருகிறது. (ம-7,10)

## ஜனாதிபதித்...

பினரும் தொடர்ந்தும் தன்னிடம் இந்த கோரிக்கையை முன்வைத்து வருவ தாக அவர் தெரிவித்தார்.

அது குறித்து அனைத்து தரப்பின ருடனும் ஏற்கெனவே பேசி வருவதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி எதிர்காலத்தில் அதற் கான பொருத்தமான தீர்மானத்தை எடுக்க தயாராக இருப்பதாக நீதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அஸ்கிரிய, மல்வத்து பீடாதிபதி களை தரிசனம் செய்த பின்னர் ஊட கங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். (ம-7,10)

## நாட்டில்...

ரமசிங்க அமைச் சரவை மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளை தனித்தனியாக சந்தித்தபோதே இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத் தின் வேலைத் திட்டம் ஜூலை இறுதிவரை அமு லில் உள்ளதால் அதற்கு முன்னர் தேர்தல் நடத்தப் படமாட்டாது என வும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நிதியச் செயற் பாட்டின் பின்னர் அரசியலமைப்பு ரீதியாக ஜனாதி பதித் தேர்தலை நடத்துவதற்கான நேரம் வருவதால் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத் திற்கு ஜனாதி பதித் தேர்தல் தடையாக இருக் காது எனத் தெரி வித்த ஜனாதிபதி, அதற்கேற்ப தேர் தல் வரைபடத்தை அரசாங்கம் திட்ட மிட்டுள்ளதாக வும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முத லில் தயாராகுமாறு அமைச் சரவை மற்றும் தேர்தல் கள் ஆணைக் குழுவுக்கு அறி வுறுத்தியதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறி வித்துள்ளதாக அரசாங்கத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படாது என் பதை இது தெளிவாகக் காட்டுவதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-7,10)

## ஈஸ்டர் இன்று...

கிறிஸ்தவர்களின் புனித நாளான ஈஸ்டர் தினம் இன்றாகும்.

இன்றைய நாளில் 2019ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ஈஸ்டர் தற் கொலைக் குண்டுத் தாக்குலில் உயிரி ழந்தவர்களை நினைவுகூருவதற்கும் ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-7,10)

## இன, மத...

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

முஸ்லிம் மற்றும் சிங்கள இனங் களுக்கிடையில் மோதலை ஏற்படுத்த வும் பௌத்த இஸ்லாமிய அடிப்படை யில் மோதலை ஏற்படுத்த கூடிய வாய்ப்பு அதிகம் உள்ளதாகவும் அவர் எச்சரித் துள்ளார்.

எனவே தேர்தலின் போது இன மதப் பிளவுகளை கட்டுப்படுத்தும் பொறுப்பு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவிற்கும் பாதுகாப்புப் படை யினருக்கும் உள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.03.30
சீட்டிழுப்பு இலக்கம் 5435
G 2 8 0 2 9 8
அத சம்பத
G 0 2 9 8
சீட்டிழுப்பு இலக்கம் 010
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.03.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1465
B 14 30 44 49 B
22851

மெகா பவர்
திகதி 30/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1783
M 05 01 21 26 80
08019

லக்கி 7 VIP
திகதி 2024.03.30
சீட்டிழுப்பு இலக்கம் 0261
G 9 1 4 5 2 9 G

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3677
சீட்டிழுப்பு திகதி 30.03.2024
V 13 22 60 72
V 94609

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.30
சீட்டிழுப்பு 0744
தனுசு 09 19 24 53 தனுசு
24188 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பிரி தன சம்பத
30.03.2024 வெற்றி வாரம் 143 வர்ணம் நீலம்
E 3 0 8 1 3 9
55886 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் 32,230,964.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2409 வர்ணம் நீலம் திகதி 30.03.2024 தினம் சனிக்கிழமை
16 20 29 40 X
28250
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,193,021.60

சனிதா
திகதி 2024.03.30 வெற்றி வாரம் 4570
08 24 26 54 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,696,007.20

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4121 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.30 தினம் சனிக்கிழமை
02 51 52 59 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 15,570,190.80
505890

ஜய
M 18 10 23 27 70
986993
1585 சிவப்பு 30.03.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 514,979,087.80

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2235
சீட்டிழுப்பு திகதி: 2024.03.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.103,051,638.40
05 32 55 67 J
149547


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(19346)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

### இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
### SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | |
|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 |
| சலவைத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 |
| ஹான்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| வோஷிங் பவுடர் | 3Kg | ~~1165~~ | 900 |

விசேட விலைக் கழிவு

(296)

No.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola.
Reg No. PV00240433
288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494



## யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு
(விலை குறைக்கப்பட்டது)

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 ½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக்கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் – கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
மொத்தமாக **5 கோடியே 25 இலட்சம்**
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு:
**+447963743585 (Whatsapp)**
**021 222 7141 (Sri Lanka)**
**Email : jamesraj_uk@yahoo.co.lk**

(225)



**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378 | 076 097 3127**



## மணப்பெண் தேவை

சுண்டிக்குளியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும், அரச தொழில் புரியும் ஆசிரியர்(ஜேர்மனி) மணமகனுக்கு படித்த பட்டதாரி அழகான மணப்பெண் தேவை.
குறிப்பு : கிரக பாவம் 30, விருச்சிக நட்சத்திரம், 12 இல் செவ்வாய், அனுசம் 4 ஆம் பாதம், தரகர் தேவை இல்லை.

(280)

**077 869 5084**



## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகர மத்தியில் காணியுடன் இரண்டு வீடுகள், மூன்று கடைகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
**0770 780 240**

(312)



## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | 265 /= | | Max 3Kg |
| 1 Kg Prima கோதுமை | 188 /= | | |
| 1 Kg றவை | 288 /= | | |
| 1 Kg சிவப்பு பருப்பு | 288 /= | | |
| 1 Kg தீட்டல்பச்சை | 165 /= | | |
| 1 Kg சம்பா | 230 /= | | |
| 1 Kg வெள்ளைப் பச்சை | 205 /= | | |
| 10 Kg விஜிதா நாடு | 1920 /= | | |
| 1 Kg கறுப்பு கௌப்பி | 799 /= | | |
| 180g Protinex | 1799 /= | ~~2000/=~~ | |
| 400g Sustagen | 3600 /= | ~~3900/=~~ | |
| 750ml New VSP நல்லெண்ணை | 1455 /= | ~~1550/=~~ | |
| 1 Kg Astra மாஜரின் | 1400 /= | ~~1600/=~~ | |
| 1 Kg கட்டி உப்பு | 80 /= | ~~110/=~~ | |
| 01 Sun பப்படம் | 185 /= | ~~225/=~~ | |
| 450g நெஸ்டமோல்ட் | 749 /= | ~~780/=~~ | |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | 270 /= | ~~380/=~~ | |

1055/=

~~1110/=~~

425/=

~~830/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:-happy basket.lk இனை நாடவும்
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(311)
Happy Supermarket
0777 8080 30



## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

**021 222 5686**
**076 424 7111**

(293)

**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna.



## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து

(C-0038)

V2 GUEST 0743900360 0743900361



## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0039)



## வீடு தேவை

நல்லூர், திருநெல்வேலி, கோண்டாவில், உரும்பிராய், கொக்குவில் பிரதேசங்களுக்கு அண்மையாக வீடு விலைக்கு தேவை. உரிமையாளர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

(286)

**077 669 2415**
**076 143 4393**



# SMART TECH SOLUTION

Since 2009

New Year Offer

- 15 வருட அனுபவம் வாய்ந்த சேவை.
- எமது வாடிக்கையாளர்களிடமிருந்து எமது சேவைத் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

2 YEARS WARRANTY

### alhua - 4CH PACKAGE

- 4CH XVR - DH - XVRIB04 - 1 (2 years warranty)
- DH - HAC HFW1200TLMP-IL-A CAMERA - 4 (2 years warranty)
- 500GB SEAGATE HARD DISK - 1 (1 years warranty)
- 100Y 3C - 2V CABLE - 1
- OUTDOOR POWER SUPPLY - 12V 2A - 4
- BNC JACK - 8
- DVR CABINET - 1



Rs. 65.000/-

### alhua - 4CH PACKAGE

- 4CH XVR - DH - XVRIB04 - 1 (2 years warranty)
- DH - HAC BIA21P CAMERA - 4 (2 years warranty)
- 500GB SEAGATE HARD DISK - 1 (1 years warranty)
- 100Y 3C - 2V CABLE - 1
- OUTDOOR POWER SUPPLY - 12V 2A - 4
- BNC JACK - 8
- DVR CABINET - 1




Rs. 46.000/-

### EZVIZ

- EZVIZ-H6C-2MP CAMERA - 1 (2 years warranty)
- 32GB KINGSTON MEMORY CARD -1 (3 years warranty)

FREE INSTALLATION



Rs. 11750/-

### EZVIZ

- EZVIZ-H8C-4G CAMERA - 1 (2 years warranty)
- 128GB KINGSTON MEMORY CARD -1 (3 years warranty)

SIM FREE


FREE INSTALLATION



Rs. 22000/-

### HIKVISION - 4CH PACKAGE

- DS-7104HGHI - M1 4 CH DVR - 1 (2 years warranty)
- DS-2CE16DOT EXLPF - CAMERA - 4 (2 years warranty)
- 500GB SEAGATE HARD DISK - 1 (1 years warranty)
- 100Y 3C - 2V CABLE - 1
- OUTDOOR POWER SUPPLY - 12V 2A - 4
- BNC JACK - 8
- DVR CABINET - 1



Rs. 47.000/-

### HIKVISION - 8CH PACKAGE

- DS-7108HGHI - M1 8 CH DVR - 1 (2 years warranty)
- DS-2CE16DOT-EXLPF COLOR VIEW CAMERA (2 years warranty)
- 1TB BLUE FEATHER HARD DISK - 1 (2 years warranty)
- 100Y 3C - 2V CABLE - 1
- OUTDOOR POWER SUPPLY - 12V 2A - 8
- BNC JACK - 16
- DVR CABINET - 1



Rs. 81.000/-

### EZVIZ

- EZVIZ-H8C-4MP CAMERA - 1 (2 years warranty)
- 128GB KINGSTON MEMORY CARD -1 (3 years warranty)

FREE INSTALLATION



Rs. 23000/-

### EZVIZ

- EZVIZ-H9C DUAL CAMERA - 1 (2 years warranty)
- 128GB KINGSTON MEMORY CARD -1 (3 years warranty)

FREE INSTALLATION



Rs. 23500/-

*நிபந்தனைக்குட்பட்டது

Contact Us for More Information
**+94 71 684 3023**

282, Hospital Road, Jaffna. / 021 221 3023
cctv@smarttechsolution.lk
smarttechsolution.lk

(314)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 101 பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org